வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 13.08.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 226 | பக்கங்கள் : 12

# புதிய பாராளுமன்றம் மூலமே சமஷ்டியை பரிசீலிக்கலாம்!

## தன்னை சந்தித்த தமிழ்த் தேசிய கட்சியினருக்கு ஜனாதிபதி பதில்!

### *13ஐ நடைமுறைப்படுத்தத் தயார்!*

கொழும்பு, ஓகஸ்ட் 13

**சமஷ்டி அதிகாரத்தை நான் வழங்கமுடியாது. பலம்மிக்க பாராளுமன்றம் ஒன்று அமையும் பட்சத்தில் அது குறித்து பரிசீலனை செய்ய முடியும் என்று நேற்று திங்கட்கிழமை தன்னை சந்தித்த தமிழ்த் தேசிய கட்சியினருக்கு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

அத்துடன், சமஷ்டி தீர்வு கிட்டும்வரை 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும் என்று கூறிய ஜனாதிபதி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் பேசி முடிவு எடுப்போம் எனவும் சொன்னதுடன், 13ஆவது திருத்தம் தொடர்பில் தான் தயாரித்து வைத்துள்ள ஆவணம் ஒன்றையும் கட்சியினரிடம் வழங்கியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பினரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்திப்புக்கு அழைத்திருந்தார். இந்த சந்திப்பை பொதுக்கட்டமைப்பிலுள்ள சிவில் அமைப்புகள் நிராகரித்து விட்ட நிலையில் கட்சிகள் என்ற ரீதியில் ரெலோ, புளொட், ஜனநாயக போராளிகள் கட்சிகள் நேற்றைய தினம் ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடின.

11



# நீதி அமைச்சராகவும் அலி சப்ரி பதவியேற்பு

கொழும்பு, ஓக. 13

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பதவியேற்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் நேற்று திங்கட்கிழமை பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

முன்னர் நீதி அமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில்

11

# நாகபட்டினம் - காங்கேசன் கப்பல் சேவை தாமதமாகும்!

நாகபட்டினம், ஓக. 13

தமிழ்நாட்டின் நாகபட்டினம் (நாகை) - காங்கேசன் துறை துறைமுகங்களுக்கு இடையிலான கப்பல் சேவை ஆரம்பமாவது மீண்டும் தாமதமடைந்துள்ளது.

நாகபட்டினம் - காங்கேசன்துறை துறைமுகங்களுக்கு இடையிலான கப்பல் சேவை எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தக் கப்பல் சேவை ஆரம்பமாவது தாமதமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசனப் பதிவுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இணையத்தளத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப கோளாறு மற்றும் சீரற்ற கால நிலையே சிவகங்கை கப்பல் தாமதமாகக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிவகங்கை கப்பல் கடந்த சனிக்கிழமை பரீட்சார்த்த முயற்சியாக காங்கேசன்துறை

11

# தமிழ்ப் பொது வேட்பாளர் கட்டுப்பணம் செலுத்தினார்!

கொழும்பு, ஓக. 13

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்ப் பொது வேட்பாளரின் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

தமிழ்ப் பொது வேட்பாளரின் சார்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைமை பணிமனையில் நேற்று திங்கட்கிழமை தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரான த. சிற்பரன் செலுத்தினார்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக பா. அரியநேத்திரன் கடந்த 8ஆம் திகதி தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பால் அறிவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### *ஒருநாள் சம்பளம் ரூ. 1,700*

# சம்பள நிர்ணய சபையில் நிறைவேறியது தீர்மானம்!

கொழும்பு, ஓக. 13

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபாய் நாளாந்த சம்பளத்தை வழங்குவதற்கான தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் நேற்று திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்டது.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள தொழில் அமைச்சின் செயலகத்தில் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை சுமார் 4 மணித்தியாலங்கள் நடந்த பேச்சைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் நிறைவேறியது.

பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம், பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் அரசாங்க தரப்பினரின் பங்களிப்புடன் தொழில் ஆணையாளரின் தலைமையில் இந்தப் பேச்சு நடைபெற்றது. (ஐ)

# த. தே. பொதுக்கட்டமைப்புக்கு சஜித் பிரேமதாஸவும் அழைப்பு

கொழும்பு, ஓக. 13

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினரை சந்தித்துப் பேச அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் உறுப்பினர்கள் பலரை தனியாக தொலைபேசியில் தொடர்பு கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தம்மை சந்தித்துப் பேசுவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும், தற்போதுள்ள வேலைப்பளுவுக்கு மத்தியில்

11

# ரூ. 100 கோடி நட்டஈடு கேட்டு விமல் எம். பி. வழக்கு தாக்கல்!

கொழும்பு, ஓக. 13

தனது நற்பெயருக்கு ஏற்பட்ட சேதத்துக்காக 100 கோடி ரூபாய் நட்டஈடு கோரி குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் இருவருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் விமல் வீரவன்ஸ எம். பி.

நேற்று திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் பிரதிவாதிகளாக குடிவரவு குடியகல்வு திணைக் களத்தின் அதிகாரி எரங்க

11

# 32 பேர் கட்டுப்பணம் செலுத்தினர்!

கொழும்பு, ஓக. 13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை 32 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இதற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 16 வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகள் சார்ந்து ஒருவரும், சுயேச்சை வேட்பாளராக 15 பேரும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கட்டுப்பணம் செலுத்துதல் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன்

11

# புளொட், ரெலோ கட்சிகள் சஜித்தையும் சந்திக்கின்றன!

கொழும்பு, ஓக. 13

புளொட், ரெலோ, ஜனநாயகப் போராளிகள் கட்சிகள் இன்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி யின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பினரை சந்திக்க அழைப்பு விடுத்திருந்தார். தனித்தனியாக இந்த

11

# சக மாணவர்கள் 22 பேரால் மாணவி கூட்டுவன்புணர்வு

### சம்பவத்தை மூடி மறைத்த பாடசாலை நிர்வாகம்!

கொழும்பு, ஓக. 13

16 வயது மாணவியை அவரின் வகுப்பில் கல்வி கற்கும் 22 மாணவர்கள் இணைந்து கூட்டு வன்புணர்வு செய்ததுடன், அந்த மாணவியை மிரட்டி பல்வேறு சந்தர்ப்பங்களில் வன்புணர்வு செய்துள்ளனர் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் மொனராகலை

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

கவிஞர் வாலி ஓர் அறிஞரைப் பார்க்கப் போயிருந்தார்.

அவர் கேட்டார், "வாலி என்று ஏன் பெயர் வைத்திருக்கிறாய்?"

வாலி சொன்னார், "இராமாயணத்திலே, வாலி யாரோடு சேர்கிறானோ அவருடைய பலத்தில் பாதி அவனுக்கு வந்து விடுமாம். அதுபோல அறிஞர்களுடன் பழகும்போது, அவர்களின் அறிவில் பாதி எனக்கு வந்து விடுமல்லவா? அதனால்தான் நான் அந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தேன்."

அறிஞர் உடனே கிண்டலாக சொன்னார், "அப்படியும் உனக்கு அறிவு வந்ததாகத் தெரியவில்லையே?"

வாலி சிரித்துக் கொண்டே, "நான் இன்னும் எந்த அறிவாளியையும் சந்திக்கவில்லையே!" என்றாராம்.

கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு எதற்காக ஆதரவளிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்தது என்பது இன்றுவரை யாருக்கும் தெரியாது. ராஜபக்ஷக்களுக்கு எதிராகத் தமிழ் மக்களின் மனநிலை காணப்பட்டதால் அவர்களுக்கு எதிரான வேட்பாளர்களுக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்பதைக் கருத்தில் கொண்டே யாருக்கு ஆதரவளிப்பது என்று கூட்டமைப்பும் முடிவு செய்தது. ஆனாலும், ஒவ்வொரு வேட்பாளர்களையும் ஆதரிக்கும் போதும் அவர்களுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதாகவே கூறப்பட்டது. அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. அவ்வாறு உடன்படுகின்ற விடயங்களை வெளியே சொன்னால் பெரும்பான்மை சிங்கள மக்கள் அவர்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்றே காரணம் சொல்லப்பட்டது. அவ்வாறு சொல்வதற்கும் ஒரு நியாயம் இருப்பதாகவே வெளித்தெரிந்தது.

ஆனால், அவ்வாறு சிங்கள மக்களுக்கு சொல்வதற்கு பயப்படுகின்ற எந்த ஒரு சிங்களத் தலைவருமே வெற்றிபெற்றாலும் - அதே சிங்கள மக்கள் விரும்பாத எந்த விடயத்தையும் செய்யப்போவதில்லை என்பதையும் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

அதனால்தானோ என்னவோ, இந்தத் தடவை தமிழ் அரசுக் கட்சியோ சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி தீர்வை ஆதரிக்கும் வேட்பாளர்களுடன் பேச்சு நடத்தி அவர்களை ஆதரிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கின்றது. அவ்வாறு ஒரு தீர்வை ஆதரிப்பதாக தங்களுக்கு சொன்னால்மட்டும் போதாது, உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அதனை உள்வாங்கவேண்டும் என்றும் தமிழ் அரசு நிபந்தனை விதித்திருக்கின்றது.

அவர்களின் இந்த நிபந்தனையை எந்த ஒரு வேட்பாளர்களும் ஆதரிக்கப்போவதில்லை என்பது தெரிந்தது தான். பதின்மூன்றாவது அரசமைப்பு திருத்தத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறுகின்ற வேட்பாளர்களே அதிலுள்ள பொலிஸ் அதிகாரத்தையும் தருவதாகக்கூட சொல்லத் தயாராக இல்லை. பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று சொல்கின்ற சஜித் பிரேமதாஸகூட பொலிஸ் அதிகாரத்தையும் கொடுப்பீர்களா என்று திருப்பிக் கேட்டால், அதனை உறுதியாக சொல்லக்கூடிய நிலையில் இல்லை. இந்த இலட்சணத்தில்தான் சமஷ்டி - சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளும் வேட்பாளர்களுடன் பேசுவதற்கு காத்திருக்கப்போகின்றது தமிழ் அரசுக் கட்சி.

கடந்த மூன்று தேர்தல்களிலும் தமிழ் மக்களின் வாக்குகள் வெறுக்காசோலையாக பயன்படுத்தப்பட்டதாகக் கூறிக்கொண்டு இந்தத் தடவையும் தமிழ் மக்களின் வாக்குகளை ஒருசில அரசியல் தலைவர்கள் தமது விருப்பப்படி "விற்பதற்கு" இடமளிக்கக்கூடாது என்று, தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை களம் இறக்குவதற்கு சிவில் சமூகப் பிரதிநிதிகள் முயற்சி செய்தபோது அதனை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளாத தெற்கின் பிரதான வேட்பாளர்கள் மூவருமே, இப்போது சற்றுப் பதற்றமடைந்து விட்டதை உணரமுடிகின்றது. அதிலும், குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அதிகம் அக்கறைப்படுகிறாரெனத் தெரிகின்றது. அதனால்தான், அவர் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் பிரதிநிதிகளை பேச்சுக்கு அழைத்திருந்தார்.

தமிழர் விவகாரம் என்றால் எப்போதுமே ஒருவரோடு மாத்திரமே "டீல்" போட்டுப் பழக்கப்பட்டவர் ரணில் விக்கிரமசிங்க. அதனால் தானோ என்னவோ தமிழர் விவகாரம் என்றதும் அவரோடே பேசி முடிவுக்கு வந்துவிடலாம் என்ற பழைய நினைப்பில் இருந்த அவருக்கு இப்போதுதான் தமிழர் அரசியலில் நடந்துகொண்டிருக்கும் மாற்றங்களைப் புரிந்து கொள்ள முடிந்திருக்கின்றது போலும்.

பொதுவேட்பாளர் விடயம் குறித்து எப்போதுமே நகைப்புக்கிடமான ஒரு விடயமாகப் பேசி வந்த அவரின் கருத்தைக் கேட்டு, அது சாத்தியமாகாது என்றே நம்பிக்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில், இப்போது தன்னைச் சுதாகரித்துக்கொண்டு, பொதுவேட்பாளர் பற்றி யோசிக்கத் தொடங்கியிருக்கிறார். அவருடைய அழைப்பை இப்போது பொதுக்கட்டமைப்பு நிராகரித்து விட்ட பின்னர் அடுத்து என்ன நடக்கின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் பற்றி சொல்ல வந்த இடத்தில் வேறு திசைக்கு சென்று விட்டது பத்தி.

அந்தக் கூட்டம் முடிந்து ஒரு சிரேஷ்ட தலைவரிடம் கூட்டம் பற்றிக் கேட்டபோது அவர் சொன்னார், "எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான வேட்பாளர்களுடன் பேச்சு நடத்துவதற்கு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது."

கட்சியின் பேச்சாளர் சொன்னார்: "வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்கத் தயாராக உள்ள ஜனாதிபதி வேட்பாளர் அந்த நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்த தயாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தீர்மானிக்கும்".

இன்றுள்ள நிலையில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர்தான் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறார் என்பது குழந்தைக்கும் தெரிந்த ஒன்று.

தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பதற்கு தமிழ் அரசுக் கட்சி தயாராகிவருகின்றது என்று நம்புவோம்.!

- ஊர்க்குருவி.

# ரூ.1700 உறுதிமொழியை நிறைவேற்றியுள்ளேன்!

## ஜீவன் தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, ஒக. 13

"பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபாவை வழங்கும் தீர்மானம், சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் சம்பள உயர்வு கிடைக்கவுள்ளது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளேன்."- என்று இதொகாவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இதன்படி, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாவும், உற்பத்தி ஊக்குவிப்பு விசேட கொடுப்பனவாக 350 ரூபாவும் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அன்று 1000 ரூபா சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படும் என உறுதியளித்தேன், அந்த உறுதிமொழியை நிறைவேற்றினேன். அதேபோல் 1700 ரூபா சம்பளம் பெற்றுத்தருவதாக உறுதியளித்தேன், அந்த உறுதிமொழியும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1,700 ரூபா தொடர்பில் சம்பள நிர்ணய சபை எடுத்த முடிவு பெரும் வெற்றியாகும்.

அத்துடன், 1700 ரூபா சம்பளம் உயர்வைப் பெற்றுத்தர முழு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார் அமைச்சர் ஜீவன்.

(அ)

# பழக் கிராமங்களை உருவாக்க திட்டம்

கொழும்பு, ஒக. 13

பழக்கிராமங்களை உருவாக்குவதற்கு காலி மாவட்ட விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்கீழ் 200 ஏக்கரில் வாழை, பப்பாசி, மாம்பழம், அன்னாசி மற்றும் தோடம்பழ செய்கைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாயத் திணைக்களம் குறிப்பிட்டுள் ளது.

இதற்காக அன்னாசி மற்றும் வாழைக்கன்றுகளை இலவசமாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# இரண்டு எம்.பிக்களின் ஆசனங்களில் வெற்றிடம்

கொழும்பு, ஒக. 13

பாராளுமன்ற உறுப்பினர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரின் ஆசனங்கள் இரத்து செய்யப்பட்டதன் காரணமாக வெற்றிடமான இரண்டு ஆசனங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 64(1) மற்றும் 64(5) ஆகிய பிரிவுகளின் பிரகாரம் இரண்டு வெற்றிடங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன எழுத்து மூலம் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவருக்கு அறிவித்துள்ளார்.

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார மற்றும் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரை கட்சியில் இருந்து நீக்குவதற்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானம் சட்ட ரீதியாக செல்லுபடியாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# எம்.பி. பதவியை ஏற்க நான் தயார்!

## ஹிருணிகா அறிவிப்பு

கொழும்பு, ஒக. 13

பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வதாக ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஹரீன் பெர்னாண்டோ நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பதவியை இழந்தார்.

இதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்காக தாம் நியமிக்கப்பட்டால் அந்தப் பதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வதாக ஹிருணிகா தெரிவித்தார்.

எனினும் அந்தப் பதவியை தமக்கு வழங்குமாறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கோரியதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

சஜித் பிரேமதாசவை ஊடக நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ற வகையில் ஆட்டுவிக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# நல்லூர் பெருந்திருவிழா சிறப்பு நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஒக. 13

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவி பணிப்பாளர் (அறநெறி பிரிவு ) திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன் பிரதம அதிதியாகவும் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் செயலாளர் சைவசித்தாந்த பண்டிதர் செ. த. குமரன் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில், அண்ணமார் அறநெறி பாடசாலை, முருகையா தேவஸ்தான அறநெறி பாடசாலை, வடலியடைப்பு பிள்ளையார் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக யாழ்ப்பாண பல்கலைக்கழக முதலாம் வருட மாணவி செல்வி சிவானுஜா ஈஸ்வரலிங்கத்தின் இசைக் கச்சேரி என்பன நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருந்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 13.08.2024 சனிக்கிழமை ஈழநாடு
குரோதி வருடம், ஆடி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசு கட்சி ஏன் தடுமாறுகின்றது?

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எம். ஏ. சுமந்திரன் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்துவரும் ஒருவர். "தமிழ்ப் பொது வேட்பாளரை தோற்கடிப்பேன்", என்று பகிரங்கமாகவே கூறியிருந்தார். இதே போன்று, கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான சீ. வீ. கே. சிவஞானமும் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் தொடர்ந்தும் எதிரான கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். ஆனால், சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், இது தொடர்பில் எந்தவோர் உறுதியான முடிவையும் எடுக்கவில்லை என்பதுடன் - தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் ஆதரவும் இல்லை. இதேவேளை எதிர்ப்பும் இல்லை என்னும் அடிப்படையிலேயே தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர். இத்தனைக்கும் தமிழ் அரசு கட்சியின் மத்திய குழுவை சேர்ந்த ஒருவரே தமிழ்ப் பொது வேட்பாளராகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றார். அவரிடம் விளக்கம் கோரவுள்ளதாக அறிவித்திருக்கின்றனர். கட்சி ஆதரவும் இல்லை - எதிர்ப்பும் இல்லை என்று கருதும் ஒரு விடயம் தொடர்பில் என்ன விளக்கத்தைக் கோர முடியும்?

தமிழ் அரசு கட்சி - குறிப்பாக, சுமந்திரன் அணியினர் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை உறுதியாக எதிர்ப்பது உண்மையாயின், ஏன் கட்சியால் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாமல் இருக்கின்றது? எதற்காக தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் மதில் மேல் பூனை நிலைப்பாட்டை மேற்கொள்கின்றனர்? தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடு தவறானது. அது தமிழ் மக்களுக்கு பாதகமான விளைவுகளையே வழங்கும் என்றால் - எதற்காக பாதகமான ஒரு விடயம் தொடர்பில் தீர்மானத்தை நிறைவேற்ற கட்சி தடுமாறுகின்றது?

தமிழ் அரசு கட்சி ஒரு ஜனநாயகக் கட்சி - அதனால், பலரிடமும் பல கருத்துகள் இருக்க முடியும். ஆனால், கட்சி இறுதியான முடிவை எடுக்கும் என்றவாறு எவ்வளவு காலத்துக்குச் சொல்லிக் கொண்டிருக்க முடியும்? ஜனநாயகக் கட்சியில் பல கருத்துகள் இருக்க முடியும் - அதனை அந்தக் கட்சிக்குள் இருப்பவர்கள் சகித்துக் கொண்டிருக்க முடியும். ஆனால், மக்களுக்கு பாதகமானது என்று ஒரு விடயம் கருதப்படுமானால் அந்த விடயத்தில் எவ்வாறு பலவிதமான கருத்துகள் இருக்க முடியும்? பாதகமான ஓர் அரசியல் விடயம் முன்னெடுக்கப்படுகின்றது என்றால் அதனை கட்சி தடுக்க வேண்டுமல்லவா!

தமிழ் அரசு கட்சியின் - முக்கியமாக தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்க்கும் அணியினர் அச்சமடைந்திருக்கின்றனர். ஒருவேளை மக்கள் பொது வேட்பாளரின் பக்கமாகத் திரும்பிவிட்டால் என்ன செய்வது? அவ்வாறானதொரு சூழலில் சடுதியாக அந்தப் பக்கம் பாயமுடியாது. எனவே, இப்போதே மதில் மேல் பூனையாக இருந்துவிட்டால் நிலைமையை அவதானித்து எந்தப் பக்கம் வேண்டுமனாலும் பாய்ந்து கொள்ளலாம் என்பதே தமிழ் அரசு கட்சியின் உண்மையான நிலைப்பாடாகும். இதன் காரணமாகவே, தமிழ் அரசு கட்சியால் ஓர் உறுதியான முடிவை எடுக்க முடியவில்லை. இனியும் அந்தக் கட்சியால் ஒரு முடிவை எடுக்க முடியாது. ஏனெனில், அந்தளவுக்குக் கட்சி பலவீனமடைந்துவிட்டது. தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதைத் தவிர, வேறு எந்தவொரு தெரிவுகளும் கட்சியிடம் இல்லை.

## நல்லூரான் திருவடி - 5

# கொழும்புத்துறை ஆச்சிரமம்

சரவணமுத்து கந்தையா

அக்காலத்தில் பூநகரி உடையாராக இருந்த சின்னத்தம்பி வல்லிபுரம் என்ற சைவ அடியார் கொழும்புத்துறையில் வசித்து வந்தார். இவரின் சகோதரியை சிற்றம்பலம் சம்பந்தர் என்பவர் மணந்திருந் தார். இவரின் வீட்டு வளவில் வீதிப் பக்கமாக ஓர் இலுப்பை மரம் நிற்கின்றது. இந்த இலுப்பை மரத்தின் நிழலிலேயே யோக சுவாமிகள் அமர்ந்திருந்து தியானம் செய் வார். அதற்கு அருகே வீதி ஓரமாக அரியாலை நன்னியர் என்பவர் கடை வைத்து வியாபாரம் செய்துவந்தார். நன்னியர் ஒரு தடவை செல்லப்பா சுவாமிகளை அவமதித்தாராம். கடைக்குள்ளேயும் அவரைக் கட்டி வைத்தாராம். இதனால், ஆத்திரமடைந்த அயலவர்கள் அந்த கடையிலிருந்து போகும்படி நன்னியரை கேட்டனராம். நன்னியரும் அந்தக் கடையிலிருந்து அகன்று விட்டார். இரவுவேளைகளில் செல்லப்பா சுவாமியை





கட்டிவைத்த அந்தக் கடை அமைந்திருந்த கொட்டிலில் எவரும் அறியாது 1913ஆம் ஆண்டில் யோக சுவாமிகள் படுத்துறங்குவாராம்.

இதன்பின்னர் விடியும் முன்னர் எழுந்து நல்லூர் பக்கமாக யோகர் போய்விடுவாராம். அங்கே தேர் முட்டியடியில் செல்லப்பா சுவாமிகளுடனும் வேறு பக்தர்களுடனும் யோகர் அமர்ந்திருப்பாராம். இதன்பின்னர் 1914ஆம் ஆண்டு கொழும்புத்துறை வளவில் இருந்த கடை அந்த வளவின் உரிமையாளர்களால் திருத்தப்பட்டது. இதனையடுத்து ஓலையால் வேயப்பட்ட குடிசை ஒன்றை அமைத்து அதில் யோகரை இரவில் அங்கே தூங்குமாறு கேட்டனர்.

சுவாமிகள் அந்தக் கொட்டிலில் தமது இறுதிக்காலம் வரை தங்கியிருந்தார். அங்கே இரவுவேளைகளில் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருமந்திரம் என்பவற்றை சிவபக் தர்கள் பாராயணம் செய்வார்கள். அப் போது யோகர் தியான நிலையில் இருப்பார். காலை ஐந்து மணிக்கே பக்தர்கள் அங்கே கூடிவிடுவார்கள். கற்பூர தீபமேற்றி தமது பிரார்த்தனைகளைத் தொடங்குவார்கள். யோகர் அங்கு வருகின்ற தாய்மார்களுக்கு ஏற்ற புத்திமதியை கூறுவார். கதைகளை வேடிக்கையாக சிரித்தபடி கூறுவார். "எல்லோரும் ஒரே குலம், எல்லோரும் ஒரே இனம், எல்லோரும் சமமானவர்களே", என்று கூறுவார். சிலரிடம், " உங்கள் கடமையை போய்ச் செய்யுங்கள். இங்கே ஏன் வருகிறீர்கள்? நாங்கள் பிச்சைக்காரர்கள். நாங்கள் சும்மா இருக்கிறோம். எம்மைத் தொந்தரவு செய்யவேண்டாம்" என்று பேசிக் கலைப்பாராம் யோகர்.

யோகரை தனவந்தர்களின் சுவாமி என்று கூறுவது அறியாமையாகும். அவர் உயர்வு, தாழ்வு, பணம், பதவி, இன்பம். துன்பம் அனைத்துக்கும் அப்பால்பட்டவர். யோகர் எப்போதும் கூறிக்கொள்வது இதுவேயாகும். "எப்பவோ முடிந்த காரியம். நாம் ஒன்றும் அறியோம். முழுவதும் உண்மை. ஒரு பொல்லாப்புமில்லை".


யோகர் இளம் பராயத்தில் விவிலிய வேதத்தைப் பயின்றார். யேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்கத்தை மிக ஆர்வத்தோடு படிப்பார். புத்த பகவானின் போதனைகளை அடிக்கடி கூறுவார். "புத்தம் சரணம், தம்மம் சரணம், சங்கம் சரணம் கச்சாமி" என்று ஆர்வத்தோடு பாடுவார். புத்தருடைய துற வறத்தை மிகவும் விரும்பியிருந்தார். இராஜ போகத்துடன் வாழக்கூடியதாக இருந்த போதிலும் புத்தர் தன்னை உணர்ந்து துறவறம் பூண்டுகொண்டார் எனக் குறிபிட்டு, பிறவியில் அவர் ஓர் இந்து எனவும் சொல்லிக்கொள்வார்.

யோகர் அவரை நாடி வருவோருடன் பேசிக்கொண்டிருந்தாலும், அவரது சிந்தனைகள் யாவும் இறைவனை நோக்கியனவாகவே இருக்கும். சில பக்தர்களை ஏசுவார் - விரட்டுவார் - உங்கள் கடமைகளைச் செய்யுங்கள் - கடமை தவறாதீர்கள் என்று அறிவுரை கூறுவார். கள்ளம், கபடமுள்ளோரை வெறுப்பார். எப்போதும் ஆனந்தமாக இருப்பார். யார் மீதும் கூடுதல் பற்றுக் கொண்டவராக இருக்க மாட்டார்.

தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 13 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஆடி 28
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : நவமி




**மேடம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். நன்மைகள் உண்டாகும் நாள்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகள் கிடைக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் அதிரடியான சலுகைகளால் போட்டிகளை சமாளிப்பீர்கள். தலைமையின் ஆதரவு பெருகும்.

**சிம்மம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புது நட்பு மலரும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். மனசாட்சி படி செயல்பட வேண்டிய நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களிடம் கனிவாகப் பேசி வேலை வாங்குவீர்கள்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியை அனுசரித்துப்போங்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். வியாபாரத்தில்தள்ளிப்போனஒப்பந்தம்கையெழுத்தாகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிறுசிறு ஏமாற்றம் வந்துநீங்கும். வியாபாரத்தில்வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

# "சட்டப்பிரச்னை என்று கூறி கோவிலை பூட்டக்கூடாது"

சென்னை,ஓக.12

"சட்டம் - ஒழுங்கு பிரச்னையைக் காரணம் காட்டி எந்தக் கோவிலையும் பூட்டி வைக்கக் கூடாது என்ற சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பை இந்து முன்னணி வரவேற்கிறது" என்று அந்த அமைப்பின் மாநில தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

"மதுரை மாவட்டம் உத்தபுரத்தில் பூட்டி வைக்கப்பட்டுள்ள முத்தாலம்மன் - மாரியம்மன் திருக்கோவிலை திறக்கக் கோரி மதுரை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் வரலாற்று சிறப்புமிக்க ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இரு சமுதாயத்தினரிடையே ஏற்பட்ட பிரச்னை காரணமாக கோவிலைப் பூட்டி சீல் வைப்பதால், சுவாமிக்கு பூஜைகள் நடத்துவது தடுக்கப்படுகிறது. கோவிலைப் பூட்டி வைப்பது, சுவாமியை சிறை வைப்பதற்கு சமம். கோவிலை காலவரையறையின்றி மூடி வைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதுபோன்ற நிகழ்வுகளை அதிகாரிகள் வேடிக்கை பார்க்கக் கூடாது. கோவிலைத் திறந்து வழக்கம் போல் பூஜைகள் நடத்த அனுமதி வழங்க வேண்டும். இதில் ஏதேனும் சட்டம் - ஒழுங்கு பிரச்னை ஏற்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம். ஆனால், சட்டம் - ஒழுங்கு பிரச்னையை காரணம் காட்டி, எந்தக் கோவிலையும் பூட்டக் கூடாது என நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் வழங்கியுள்ள தீர்ப்பு வரவேற்பிற்குரியதாகும்"- என்றார் இந்து முன்னணி தலைவர்.

(எ)

# இளம் வாக்காளர்களை இலக்கு வைத்தே தமிழ்ப் புதல்வன், புதுமைப் பெண் திட்டம்

## ஆயிரம் ரூபா அரசு என்று சீமான் சாடல்

சென்னை, ஓக. 13

புதிதாக படித்து முடித்து வெளியே வரும் இளம் வாக்காளர்களை இலக்கு வைத்து தான் புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

படித்து முடித்து வெளியே வரும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை கொடுப்பது தான் சரியான திட்டம். அதைவிடுத்து குடும்பத்தில் அம்மா, மகன், மகள் என அனைவருக்கும் தனித்தனியாக 1000 ரூபாய் வழங்குது என்பது தி. மு. க. அரசின் கடந்த 3 ஆண்டு கால சாதனைகளில் ஒன்றாக மட்டுமே இருக்குமென்றால், தி. மு. கவை ஆயிரம் ரூபாய் அரசு என்று தான் கூறவேண்டும்.


இவ்வாறு சென்னையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் சீமான் கூறினார்.

அமைச்சர் தா. மோ. அன்பரசன், "நடிகர்களை திரைப்படங்களில் பார்க்கலாம். அத்துடன் வந்துவிட வேண்டும். நடிகர்களுக்கு அறிவு இருக்குமா? என்றால் இருக்காது. கட்சி நடத்துவது என்றால் சாதாரணமா?"- என்று கூறியுள்ளார்.

அவர் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியை கூட அவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கலாம். அதை ஏன் தமிழக வெற்றிக் கழகத் தலைவர், நடிகர் விஜயை கூறியதாக எடுத்துக் கொள்ள வேண்டும். நடிகர்களுக்கு அறிவில்லை என்றால் சரத்குமார், ராதிகா, குஷ்பு, சந்திரசேகர், நெப்போலியன் போன்றோரை ஏன் கட்சியில் சேர்த்தனர் என்றும் சீமான் கேள்வியெழுப்பினார்.

(எ)

# விழிப்புணர்வு பேரணி




சென்னை, ஓக. 13

கல்வி, ஆராய்ச்சிக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தல், பருவநிலை மாற்றத்துக்கான தடுப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் இணைந்து சென்னையில் விழிப்புணர்வுப் பேரணி நடத்தினர்.

# "ஆள் பிடிக்கும் பழக்கம் இல்லை"

சென்னை, ஓக. 13

ஆள் பிடிப்பது, இன்னொரு கட்சியில் இருந்து இந்த கட்சிக்கு தூது விடுவது போன்ற வேலைகளை எல்லாம் த. மா. காவில் யாரும் செய்வதும் கிடையாது. நாங்கள் அதை விரும்புவதும் கிடையாது.

நேர்மை, எளிமை, வெளிப்படை தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நாம் மக்கள் பணியை தொடர்ந்து வருகிறோம் என்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்தார். (எ)

# பொம்மை முதல்வர் ஸ்டாலின்; ஊதாரி உதயநிதி

## தி. மு. க. அரசு மீது இ. பி. எஸ். விமர்சனம்

சேலம், ஓக. 13

கார் பந்தயம் நடத்துவதற்காக மக்கள் பணத்தை தி. மு. க. அரசு ஊதாரித்தனமாக செலவிடுவதாகக் குற்றம் சாட்டியுள்ள சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி விளையாட்டாக செய்து கொண்டிருப்பது வேதனையளிக்கிறது எனவும் கூறியுள்ளார்.

சேலத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது. இளைஞர்கள் போதைக்கு அடிமையாகி, வாழ்க்கை சீரழியும் நிலை உருவாகியுள்ளது. போதைப் பொருள் விற்பனையை தடுக்க முடியாத திறமையற்ற பொம்மை முதலமைச்சராக ஸ்டாலின் இருப்பதால் இளைஞர்களின் எதிர்காலம் வீணாகி வருகிறது.

மக்களின் தேவைகளை நிறைவேற்ற வழியின்றி, கார் பந்தயம் நடத்த தி. மு. க. அரசு தயாராகி வருகிறது. கார் பந்தயம் நடத்த இருங்காட்டுக் கோட்டையில் இடம் இருக்கும் போது, அதை விட்டு விட்டு மக்கள் நடமாட்டமும், போக்குவரத்து நெருக்கடியும் மிகுந்த வீதியில், மக்களின் வரிப்பணத்தில் கார் பந்தயம் நடத்த தி. மு. க. அரசு துடிக்கிறது- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு எதிராக செயல்பட்டவர்கள் அரசியலில் இனி தலைதூக்கமுடியாது!

## கூறுகிறார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

கொழும்பு, ஓக. 13

**பொதுஜன பெரமுனவின் முதலாவது கன்னி தேர்தல் பிரசாரம் எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அனுராதபுரத்தில் நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக செயல்பட்டவர்கள் அரசியல் ரீதியாக இனிமேல் தலை தூக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- எதிர்வரும் 21ஆம் திகதி அதிகளவான மக்கள் எமது கூட்டத்தில் கூடுவார்கள். எனவே அதற்காக நாம் எல்லா வகையிலும் தயாராக உள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக செயற்பட்டவர்கள் அரசியல் ரீதியாக இனிமேல் தலை தூக்க முடியாது.

அதேபோன்றதொரு விடயம் இன்று சுதந்திரக் கட்சிக்கும் ஏற்பட்டுள்ளதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு கிராம மட்டத்திலேயே அதிகமாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அணுகிய சிலர் மீண்டும் கட்சிக்கு வருமாறு கோரியுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க மிகக் குறைந்த வாக்குகளை மாத்திரம் பெற்று தேர்தலில் தோல்வியடைவார்.

பொதுஜன பெரமுன ஒரு இளம் ஜனாதிபதி வேட்பாளராக நாமலை களமிறக்கியுள்ளது. எனவே நாமலை சுற்றி அனைவரும் ஒன்றிணைவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது -என்றார்.

(அ)

# தமிழ் மக்களின் சமூக பிரச்னைகளை ஆராய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்

## ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 13

அரசாங்கத்தினால் புதிதாக உருவாக்கப்படவுள்ள சமூக மற்றும் நீதிக்கான ஆணைக்குழுவில் தமிழ் மக்களின் சமூகப் பிரச்னைகளை விரிவாக ஆராய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் நுவரெலியா மாவட்ட கல்விசார் நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்றும் நேற்று முன் தினம் நுவரெலியாவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது-


நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எனவே அதனை மாற்றி வேறுபாதையில் பயணிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

மலையகத் தமிழ் மக்களுக்கு சமூக நீதியை நிலைநாட்டுவதற்காக அடுத்த வருடம் மாநாடு ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளேன்.

அத்துடன் அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்படவுள்ள சமூக நீதி ஆணைக்குழுவில் தமிழ் மக்களின் சமூகப் பிரச்னைகளை விரிவாக ஆராய சந்தர்ப்பம் கிடைக்கும்-என்றார்.

(அ)



# இளவாலையில் மருத்துவ முகாம்

## யாழ். பல்கலை மாணவர்களின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம், யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற குறித்த மருத்துவ முகாமில் குருதியமுக்கம், உயரத்திற்கேற்ற உடல் நிறை, குருதியில் சீனியின் அளவு, பற் பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, குருதிச் சோகை, தைராய்டு நோய்கள் போன்ற பிற தொற்றா நோய்களுக்கான அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டதோடு, உரிய மருத்துவ சிகிச்சைகள் மற்றும் மருத்துவ ஆலாசனைகளும் வழங்கப்பட்டன.

மருத்துவர் பேரானந்தராஜா உள்ளிட்ட மருத்துவர் குழாமினர் மருத்துவ முகாமில் உரிய மருத்துவ ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கியிருந்ததோடு, இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் செயற்பாட்டாளர்கள் குறித்த மருத்துவ முகாமிப் தங்கள் தன்னார்வ பங்களிப்புகளையும் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# சீன அரிசியில் மறைந்திருக்கும் அரசியலைவிட அதில் உறைந்திருக்கும் ஆபத்துக்கள் அதிகம்!

## பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஓக. 13

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே 1952ஆம் ஆண்டு இறப்பர்-அரிசி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இதற்கு அமைவாக, இலங்கை சீனாவுக்கு இறப்பரை ஏற்றுமதி செய்து பதிலாக அங்கிருந்து அரிசியை இறக்குமதி செய்து வந்துள்ளது. இலங்கையில் 1952ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதாரச்சரிவு இறப்பர்-அரிசி உடன்பாட்டுக்கு வழிசமைத்ததைப்போன்றே தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி சீனாவில் இருந்து அவ்வப்போது நன்கொடையாக அரிசியைக் கையேந்துவதற்கு வழிகோலியுள்ளது. அண்மையிற்கூட வடக்கு, கிழக்குக் கடற்றொழிலாளர்களுக்கு சீனாவின் நன்கொடை அரிசி விநியோகப்பட்டுள்ளது. இந்நன்கொடையில் மனிதாபிமானத்தை விட பிராந்திய அரசியல் மேலோங்கியிருப்பது வெளிப்படையானது. ஆனால், சீன அரிசியில் மறைந்திருக்கும் அரசியலைவிட அதில் உறைந்திருக்கும் ஆபத்துகள் அதிகம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

இலங்கைக்கு சீனா நன்கொடையாக வழங்கிவருகின்ற அரிசி குறித்து பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகில் அதிகளவில் அரிசியை உற்பத்தி செய்யும் நாடாகவும் அதிக அளவில் அரிசியை ஏற்றுமதி செய்யும் நாடாகவும் சீனாவே முதலிடத்தில் உள்ளது. ஆனால், அண்மைக்காலத்து ஆய்வுகளின் முடிவுகள் சீனாவின் அரிசியில் சூழல்மாசு காரணமாகக் கட்மியம் அங்கீகரிக்கப்பட்ட அளவை விடவும் பன்மடங்கு அதிகமாக இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. கட்மியம் உடலுக்கு அத்தியாவசியம் இல்லாத ஆபத்தான ஒரு பாரஉலோகம். உணவின் மூலம் உடலில் நுழைந்து நீண்டகாலம் தேங்கியிருக்கக்கூடிய இக்கட்மியம் சிறுநீரகங்களை செயலிழக்க வைப்பதோடு மார்பு, நுரையீரல், சதையம், சிறுநீரகம் போன்றவற்றில் புற்றுநோய் ஏற்படுவதற்கும் காரணமாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில், சீனாவில் இருந்து இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் தரப்பரிசோதனை செய்யப்படாத அரிசியை நுகர்வது குறித்துப் பொதுமக்கள் விழிப்பாக இருப்பது அவசியமாகும்.

இலங்கை 2023ஆம் ஆண்டு அரிசி உற்பத்தியில் தன்நிறைவைக் கொண்டிருந்தது. கடந்த பெரும் போகத்தில் மழைவெள்ளம் சில பிரதேசங்களில் நெற்செய்கையைப் பாதித்திருந்தாலும் இந்த ஆண்டினது ஒட்டுமொத்த நெல் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படவில்லை. சீனா பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதை மாத்திரமே நோக்கமாகக் கொண்டிருப்பின் தனது சந்தேகத்திற்கு இடமான அரிசியை இலங்கையில் விநியோகிப்பதை நிறுத்தி இலங்கையிலேயே அதனைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதே சாலச் சிறந்தது. இந்நடைமுறை சரியான சந்தை வாய்ப்புகளின்றித் தவிக்கும் எமது விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்துவதோடு ஆபத்தான பாரஉலோகங்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கவும் செய்யும். சோற்று அரசியல் சேற்றுக்குள் சிக்கி மென்மேலும் எமது மக்களின் வாழ்வு சீரழியாமல் இருக்க உரிய தரப்புகள் இது குறித்து உடனடியாக ஆவனசெய்ய வேண்டும்-என்றார்.

(அ)

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு இராதாகிருஷ்ணன் போர்க்கொடி!

கொழும்பு, ஓக. 13


தமக்கென தனி இராச்சியமொன்றை அமைக்க வேண்டும் என்ற மனோநிலையே அன்று முதல் இன்றுவரை வடக்கு மக்கள் மத்தியில் காணப்படுகின்றது - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

இணைந்த வடக்கு-கிழக்கை ஜே.வி.பியினர்தான் பிரித்தனர், இதனால் ஜே.வி.பியினரை அம்மக்கள் விரும்பவில்லை. ஆனால் தற்போதைய இளைஞர்கள், ஜே.வி.பியினரை ஆதரித்தால் நல்லது என சிந்திக்கும் நிலைமையும் காணப்படுகின்றது.

சஜித் பிரேமதாஸ புதிய தலைவர், அவரின் தந்தை



ரணசிங்க பிரேமதாச இந்திய இராணுவத்தை விரட்டுவதற்கு அவர்களுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கினார் , எனவே, சஜித்துக்கான ஆதரவு தளம்

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் யாழ்ப்பாணத்தில் ஆதரவு உள்ளது, முழுமையாக இல்லை எனக்கூறமுடியாது. தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டுள்ளார், இது தேவையற்ற விடயமாகும், வாக்குகளை பிரிக்கும் செயலாகும். தமிழரசுக் கட்சி இந்த முயற்சிக்கு உடன்படவில்லை.

வடக்கில் கையகப்படுத்தப்பட்ட காணிகள் மீள வழங்கப்படவில்லை, தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் அதிருப்தி உள்ளது, அதேபோல அந்த மக்கள் விரும்பாத சில செயற்பாடுகளை அரசு முன்னெடுக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையால்தான் தமக்கென தனி இராச்சியமொன்றிருந்தால் என்ற சிந்தனை அவர்களுக்கு ஏற்படுகின்றது. எனவே, மத ஆக்கிரமிப்பு உட்பட தேவையற்ற விடயங்களை ஏற்படுத்தாது, அனைவரும் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை!

## சந்திரிகா குமாரதுங்க அறிவிப்பு



கொழும்பு, ஓக. 13

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை” என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தனகல்ல தொகுதியின் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களு டன் இடம்பெற்ற விசேட கலந் துரையாடலின்போதே சந்தி ரிக்கா இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டை தெளிவு படுத் தும் நோக்கில் இந்த கலந்துரை யாடல் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.

சுதந்திரக் கட்சியின் உறுப்பி னர்கள் சிலர் ஜனாதிபதி வேட் பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்குமாறு சந்திரிக்கா விடம் கோரிக்கை முன்வைத்தி ருந்தனர். இந்நிலையில் அவர் நேற்று முன் தினம் சந்திரிக்கா தனது நிலைப்பாட்டை அறி வித்தார்.

இதேவேளை, அத்தனகல்ல பிரதேசத்தில் செயற்படுகின்ற சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் கள் தாம் விரும்பும் வேட்பாள ருக்கு ஆதரவளிப்பதில் தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் சந்திரிக்கா கூறினார். (அ)

# புதையல் தோண்டிய நபர் கைது!

கொழும்பு, ஓக. 13

நெளுக்குளம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மணிப்புரம் பகுதி யில் உள்ள வீடொன்றிற்குள் புதையல் தோண்டிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அகழ்வுக்காகப் பயன்படுத்திய பொருட்களு டன் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

கைதானவர் நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 68 வயது டையவர் என குறிப்பிடப்பட் டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை நெளுக்கு ளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# யாழில் மூதாட்டி சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாணத்தில் தனிமை யில் வசித்த மூதாட்டி ஒருவர், சந்தேகத்திற்கு இடமான முறை யில், உயிரிழந்துள்ள நிலையில், அயல் வீட்டு இளைஞன் சந்தே கத்தில்கைது செய்யப்பட்டுள்ளார்.

மீசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த நடேசபிள்ளை சரஸ்வதி யம்பாள் (வயது 80) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மூதாட்டி சந்தேகத்துக்கு இடமான முறையில் உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் விசா ரணைகளை முன்னெடுத்த கொடிகாமம் பொலிஸார் மூதாட்டியின் வீட்டுக்கு அரு கில் வசித்து வந்த இளைஞனை சந்தேகத்தில் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (அ)

# இறைவரி திணைக்கள அதிகாரிகள் என்னும் போர்வையில் பண மோசடி

கொழும்பு, ஓக. 13

உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகள் எனும் போர்வையில் வர்த்தக நிலை யங்களில் பண மோசடிகள் இடம்பெறுவதாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்க ளம் தெரிவித்துள்ளது.

வருமானத்துறை அதிகாரி கள் எனும் போர்வையில் பணம் வசூலிக்க வருபவர்களிடம் பணம் கொடுக்க வேண்டாமென திணைக்களம் பொதுமக்களை அறுவுறுத்தியுள்ளது.

வருமானத்துறை அதிகாரி களாக போலி வேடம் தரித்து வருகை தரும் நபர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங் களுக்கும் அறிவிக்கப்பட்டுள் ளதாக இறைவரித் திணைக்க ளம் குறிப்பிட்டுள்ளது.

அனைத்து வகையான வரி கள் தொடர்பான நிலுவைத் தொகைகள் உரிய முறையில் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு மாத்திரமே வசூலிக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வரி செலுத்துவதில் ஏதே னும் சிக்கல்கள் இருப்பின் அது குறித்து அறிவிக்குமாறும் உள் நாட்டு இறைவரித் திணைக்க ளம் மக்களை கேட்டுக்கொண் டுள்ளது. (அ)

# பெருந்தோட்டத் துறைக்கான விசேட செயலணி அமையும்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 13

தாம் ஜனாதிபதியாகப் பத வியேற்று 48 மணித்தியாலங்க ளுக்குள் பெருந்தோட்டத் துறைக்கான விசேட செயலணி ஒன்று ஸ்தாபிக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மலையக தமிழர் அபிலா சைகள் அடங்கிய உடன்ப டிக்கை ஒன்று நேற்று தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வின் பின்னர் கருத்து தெரிவித்த போதே சஜித் பிரேமதாச இந்த விடயத் தைக் குறிப்பிட்டார்.

அந்த விசேட செயலணி ஊடாக பெருந்தோட்ட மக்க ளின் அரசியல் பொருளாதாரம், சுகாதார மற்றும் கல்வித்துறைக ளில் அந்த மக்களை பன்முகப்ப டுத்துவதற்கான வேலைத்திட் டங்கள் முன்னெடுக்கப்படவுள் ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# நாட்டில் ஒரு பயங்கரமான சமூகம் உருவாகுவதைத் தடுத்தார் ரணில்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, ஓக. 13

இலங்கையில் சட்டம், ஒழுங்கு மற்றும் ஜனநாயகத்தை ஒழித்து, பங்களாதேஷைப் போன்று காட்டுச் சட்டம் ஆட்சி செய்யும் கொடூரமான சமூ கத்தை உருவாக்குவதற்கான போராட்டக்காரர்களின் முயற்சி, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிப தியாகப் பதவியேற்றதும் தோல் வியடைந்ததாக நகர அபிவி ருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

போராட்டக்காரர்களின் சதி களை முறியடித்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்படக்கூ டிய புதிய கலாசாரத்தை இந்த நாட்டில் உருவாக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க முன்னிலை வகித்துள்ளார் என அமைச்சர் வலியுறுத்தினார்.

நேற்று முன் தினம் பியகம தொகுதியில் கூட்டு ஜனாதிபதி யின் வெற்றிக்காக கூட்டுக் குழுக் களை அமைப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்ட போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த கலந்துரை யாடல் பியகம பி.டி. கார்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

மேலும் கருத்து தெரிவித்த பிரசன்ன ரணதுங்க மேலும் கூறியதாவது,

இன்று பங்களாதேஷில் என்ன நடக்கிறது என்று பாருங் கள். இலங்கையில் நடந்தவற் றின் பிரதி இன்று பங்களாதே ஷிலும் நடக்கிறது. ஜனாதிபதி முதலில் தாக்கப்பட்டார். ஜனா திபதி மாளிகையும் ஜனாதிபதி அலுவலகமும் அழிக்கப்பட்டன. இதையடுத்து பிரதமர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். நாட்டை விட்டு ஓடிவிட்டனர். இன்று பங்களாதேஷில் அது தான் நடக்கிறது.

அதிர்ஷ்டவசமாக, அந்த இரண்டு சம்பவங்களும் இலங் கையில் நடந்தபோது, ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க, நாட் டின் பொறுப்பை ஏற்றார். போராட்டக்காரர்களினால் வேலை நிறுத்தம் செய்ய முடி யவில்லை. தொலைக்காட்சியி லும் சமூக வலைதளங்களிலும் லால் காந்தா சொன்ன கதைக ளைப் பார்த்திருப்பீர்கள். அவர் கள் போராட்டக்காரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இதில் நாங்களும் சேரப் போகி றோம் என்று கதை கட்டினார் கள். பாராளுமன்றம் போராட் டக்காரர்களின் கைக்கு சென்றி ருந்தால் இந்த நாட்டின் நிலை மையை சற்று சிந்தித்து பாருங்கள்.

ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டிற்கு ஏதாவது செய்யக்கூ டிய மற்றும் தீர்மானங்களை எடுக்கக்கூடிய ஒரு தலைவர் என்று மக்கள் ஒரு கருத்தை உரு வாக்கி நம்பிக்கையை உருவாக் கியுள்ளனர்.

நாம் அனைவரும் ஒன்றி ணைந்து செயல்படக்கூடிய ஒரு அமைப்பை இன்று நாட்டில் கட்டியெழுப்பியுள்ளோம்-என் றார். (அ)

# மேல் மாகாணத்தில் அதிகரிக்கும் டெங்கு நோயாளர் எண்ணிக்கை!

கொழும்பு, ஓக. 13

மேல் மாகாணத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய மேல் மாகா ணத்தில் 13,781 டெங்கு நோயா ளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

இந்த வருடத்தின் ஒகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதி யில் 33,961 டெங்கு நோயாளர் கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயா ளர்கள் இனங்காணப்பட்டுள்ள தாகத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 8,179 பேர் டெங்கு தொற்றுடன் அடையாளங்கா ணப் பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு தொற்று உறுதியான வர்களில் 16 பேர் உயிரிழந்த தாக சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது. (அ)

# சிறுவனைக் கடத்திய கான்ஸ்டபிள்கள் கைது

கொழும்பு, ஓக. 13

16 வயது சிறுவனை காரில் கடத்திச் சென்ற ஒரே குடும்பத் தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள் சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் விசேட பணியகத் தில் ஹோமாகம பிரிவில் கட மையாற்றும் ஒருவரும் மீகொட பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றும் ஒருவருமாக இரு கான்ஸ்டபிள்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பல்லேகம பகுதியில் வசிக்கும் 16 வயது டைய சிறுவனை காரில் கடத் தப்பட்டுள்ளதாக பொலிஸா ருக்கு கிடைத்த தகவலின் பிரகா ரம் குறித்த கார் எம்பிலிப்பிட் டிய நோனாகம வீதியிலுள்ள தனியார் வங்கிக்கு முன்பாக கார் கண்டுபிடிக்கப்பட்டதாக வும் குறித்த காரில் நான்கு பேரும் கடத்தப்பட்ட சிறுவனும் இருந் ததாகவும் பொலிஸார் குறிப் பிட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குகளை பெறுவதற்காக இலஞ்சம் வழங்கப்படுகிறது

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 13

**வாக்குகளை பெறுவதற்காக அரசியல் பிரதிநிதிகள் சிலர் மக்களுக்கு இலஞ்சம் வழங்குவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.**

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 84 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளதாக பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அவற்றில் பெரும்பாலானவை அதிகாரம் மற்றும் சொத்துகளை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டுக்களென பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி நிலவும் இந்தக் காலக்கட்டத்திலும் பிளாஸ்ட்டிக் கதிரைகள், கோழிக்குஞ்சுகள், பாடசாலை உபகரணங்கள் மக்களுக்கு வழங்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தலை நோக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இது குறித்து மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் ரோஹன ஹெட்டியாராச்சி வலியுறுத்தினார்.

இதேவேளை, தேர்தல் சட்டங்களை மீறியதாக இதுவரை 44 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் இலஞ்சமாக பல்வேறு பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படுவதாக கடந்த 09 ஆம் திகதியிலிருந்து முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவில் 09 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறியதாக 04 முறைப்பாடுகளும் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 05 முறைப்பாடுகளும் தமக்கு கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

(அ)

# இந்திய படகு மூலம் பிரவேசித்த இலங்கை பிரஜை ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 13

சட்டவிரோதமாக இந்தியப் படகொன்றின் மூலம் வென்னப்புவ பகுதிக்குள் பிரவேசித்த இலங்கை பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையினரும் பொலிஸாரும் வென்னப்புவ கடற்பரப்பில் இணைந்து முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கையின் போது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் வென்னப்புவ பகுதியில் உள்ள கடற்கரையில் இரகசியமான முறையில் தரையிறங்க முற்பட்ட போது கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர், போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்துக் கடந்த 2021ஆம் ஆண்டு இந்தியாவில் கைது செய்யப்பட்டவர் எனத் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ரயில் மோதி ஒருவர் பலி!

கொழும்பு, ஓக. 13

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்தார்.

பிலிமத்தலாவை மற்றும் மித்தெனிய ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் குறித்த நபர் ரயிலில் மோதி உயிரிழந்ததாகவும் சடலம் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 35 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் என்பதுடன், அவர் 6 அடி 4 அங்குல உயரம் உடையவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சடலம் பேராதனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சவாலை ஏற்க நாம் தயார்!

## கூறுகின்றார் அநுரகுமார

கொழும்பு, ஓக. 13

இந்த தேர்தலுக்கப் பின்னர் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான சவாலையும், எமது நாட்டை வளமான நாடாக மாற்றுவதற்கான சவாலையும், மக்களுக்கு நல்ல வாழ்க்கையை உரித்தாக்கிக் கொடுப்பதற்கான சவாலையும் தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளத் தயார். எனவே, இன்று இட்ட இந்தக் கையொப்பம் இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிகரமான கையொப்பமிடலாக அமையும் என்பது நிச்சயம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமை அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் வேட்புமனுவில் கையொப்பமிட்ட சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெரும் நெருக்கடிக்குள் இருந்த ஆளும் குழுவினால் எமது நாடு அழுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து எமது நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கான சவாலை தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளத் தயார். எனவே, இன்று நாங்கள் இட்ட இந்த கையொப்பம் நிச்சயமாக வெற்றிக்கான கையொப்பமிடலாக அமையும்.

ஏனென்றால், இப்பொழுது ஏனைய பாசறைகள் ஒவ்வொரு குழுவாகப் பிரிந்து, சிதைந்து அழுக்குகளை சேகரிக்கும் நிலைக்கு மாறியுள்ளது.

தேசிய மக்கள் சக்தியாகிய நாம் ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே எமது பயணத்தை சரியாக ஆரம்பித்தோம். நாங்கள் மிகவும் பலம்பொருந்திய வகையிலும் ஒழுங்கமைந்த வகையிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டி இற்றைவரை இந்தப் பயணத்தை தொடர்ந்து கொண்டி ருக்கின்றோம்.

இன்னும் எங்களுக்கு ஒரு மாதத்தை விட சற்று அதிகமான நாட்கள்தான் இருக்கின்றன. இந்தக் கொஞ்ச நாட்களில் நாங்கள் மிகவும் பலம்பொருந்திய வகையில் எமது தேர்தல் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

கிராமங்களில் மிகவும் வலிமைமிக்க ஒரு ஒழுங்கமைப்பும் அதைப்போலவே, தேசிய மக்கள் சக்திக்கு சொந்தமான பலம் பொருந்திய குழுக்களும் இருக்கின்றன. எனவே, இந்த தேர்தலை நிச்சயமாக எங்களால் வெற்றிகொள்ள முடியும்.

இந்த தேர்தலுக்கப் பின்னர் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான சவாலையும், எமது நாட்டை வளமான நாடாக மாற்றுவதற்கான சவாலையும், மக்களுக்கு நல்ல வாழ்க்கையை உரித்தாக்கிக் கொடுப்பதற்கான சவாலையும் தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளத் தயார். எனவே, இன்று இட்ட இந்தக் கையொப்பம் இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிகரமான கையொப்பமிடலாக அமையும் என்பது நிச்சயம்-என்றார்.

(அ)

# ராஜபக்ஷர்களே மக்களை யாசகர்கள் ஆக்கினார்கள்

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 13

நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கியதற்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளி ஒட்டுமொத்த மக்களையும் கையேந்த வைத்த ராஜபக்ஷ குடும்பத்துக்கு பதிலடி கொடுக்க வேண்டும். நாமல் ராஜபக்ஷவை படுதோல்வியடைய செய்து மக்கள் தமது வெறுப்பை வெளிப்படுத்த வேண்டும். ஒட்டுமொத்த மக்களையும் யாசகர்களாக்கிய ராஜபக்ஷவின் குடும்பத்துக்கு தக்க பாடத்தை ஜனநாயக முறையில் புகட்டவேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பு பிலியந்தல பகுதியில் இடம்பெற்ற ஐக்கிய குடியரசு முன்னணியின் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டுக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் சிறந்த அபிவிருத்தித் திட்டங்களை நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னெடுத்தோம்.நட்டமடைந்த அரச நிறுவனங்களையும் இலாபமடைய செய்து அதன் பயனை நாட்டு மக்களுக்கு பல்வேறு வழிகளில் பெற்றுக் கொடுத்தோம்.

2019 ஆம் ஆண்டு இனவாதம் மற்றும் மதவாதத்தை முன்னிலைப்படுத்தி கோட்டபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். இவர் ஜனாதிபதியாகியது நாட்டின் துரதிஸ்டம் என்கே குறிப்பிட வேண்டும்.கோட்டபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் எவ்விதமான தூரநோக்கு சிந்தனைகளுமில்லாமல் பல அபிவிருத்தி கருத்திட்டங்களை இரத்து செய்தார்.இலகு ரணில் திட்டத்தை விசேடமாக குறிப்பிடவேண்டும்.

2020 ஆம் ஆண்டு இலகு ரயில் அபிவிருத்தித் திட்டத்தை இரத்து செய்யாமலிருந்திருந்தால் இந்த ஆண்டு அந்த அபிவிருத்தி திட்டத்தை நிறைவு செய்திருக்க முடியும்.இலகு ரயில் அபிவிருத்தி திட்டம் குறித்து ஜப்பான் நாட்டுடன் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

ஒட்டுமொத்த மக்களையும் யாசகர்களாக்கி இந்திய யாசகர் இலங்கைக்கு நிவாரணம் வழங்கும் நிலைக்கு நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய ராஜபக்ஷர்கள் "பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் திட்டம் எம்மிடம் உள்ளது" என்று குறிப்பிட்டுக் கொண்டு மக்கள் மத்தியில் செல்வது வேடிக்கையாகவுள்ளது. நாட்டை வங்குரோத்துக்கு தள்ளியவர்களால் எவ்வாறு பொருளாதார்தை மேம்படுத்த முடியும்.நாட்டு மக்கள் தெளிவாக சிந்திக்க வேண்டும்.

பொருளாதார பாதிப்புக்கு முன்னாள் பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ,பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் பொறுப்புக்கூற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. இவர்களுக்கு எதிராக இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் இன்றும் சுதந்திரமாக உள்ளார்கள்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவை களமிறக்கியதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் ஒட்டுமொத்த மக்களையும் யாசகர்களாக்கிய ராஜபக்ஷவின் குடும்பத்துக்கு தக்க பாடத்தை ஜனநாயக முறையில் புகட்ட வேண்டும்.ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவை படுதோல்வியடைய செய்து மக்கள் தமது வெறுப்பை வெளிப்படுத்த வேண்டும்.ராஜபக்ஷர்கள் 2022 ஆம் ஆண்டு மே 09 மற்றும் ஜூலை 09 காலப்பகுதியில் கற்றுக் கொள்ளாத படிப்பினையை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி கற்றுக் கொடுக்க வேண்டும்-என்றார்.

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 337 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஓக. 13

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தேர்தல் முறைப்பாடுகள் மேலும் அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றுக்காலை 10 மணியுடன் நிறைவடைந்த [illegible] கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 17 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் [illegible] யுள்ளது.

இந்த நிலையில், ஜூலை 31 ஆம் திகதி முதல் நேற்று வரை 337 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு தேவை என்பதால்தான் தமிழ்ப் பொது வேட்பாளர்

கருணாகரம் எம். பி. தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஓக. 13

**புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வு தேவை என்பதை உணர்ந்து கொண்டதால்தான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத் தப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் உள்ள அவ ரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலுக்காக 25 இற்கும் மேற்பட்டவர்கள் களமிறக்கப்பட்டுள்ள போதி லும் வடக்கு கிழக்கினை மையப் படுத்தி ஒட்டுமொத்த தமிழர்க ளுக்காகவும் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் பெயரிடப் பட்டுள்ளார். முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் அரியநேத் திரன் பெயரை தமிழ்த் தேசிய கட்சிகளும் சிவில் சமூகச் செயல் பாட்டாளர்களும் இணைந்து முன்மொழிந்துள்ளனர்.

தமிழ்ப் பொது வேட்பாளர் தேவை என்ற நிலைமை இன்று உருவாகியுள்ளது. கடந்த காலத் தில் இந்த நாட்டினை மாறிமாறி ஆட்சி செய்த அரசாங்கங்களி னாலும் தமிழர்களின் பிரச்னை கள் கவனத்தில் கொள்ளப்ப டாத நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரின் தேவை ஏற்பட்டது.

தமிழ் மக்களின் பிரச்னை இன்னும் தீர்க்கப்படாத நிலை யில் இன்றும் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே நடத்தப்படுகி றார்கள் என்பதையும் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்க் கட் சிகள் ஒன்றாக செயல்பட்டது போன்று தற்போதும் ஒன்றாகப் பயணித்து தமிழ் மக்களின் உரி மைக்காக குரல்கொடுக்க வேண் டும் என்பதற்காக தமிழ்ப் பொது வேட்பாளரின் அவசியம் உணர்ந்து அதனை செய்வதற்கு முன்வந்துள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தலில் வெல்லக்கூடிய வேட்பாளர்கள் எங்களுடன் பேசுவதற்கான காலம் உருவாகி உள்ளதாக நான் உணர்கின்றேன். இரா. சாணக்கியனுக்கு தமிழ் அரசு கட்சியின் அனுமதி இன்றியே 60 கோடி ரூபாய் நிதி வழங்கப் பட்டுள்ளது. எதிர்வரும் தேர்த லுக்காக கட்சியின் முடிவின்றி இவ்வாறான முடிவுகளை எடுத் துள்ளவர் பற்றி மக்கள் தான் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

நான் அறிந்த வரையில் கிட் டத்தட்ட சாணக்கியனுக்கு ஜனாதிபதி 60 கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளார். ஏன் இவ் வளவு நிதி சாணக்கியனுக்கு வழங்கியுள்ளார் என சில பாரா ளுமன்ற உறுப்பினர்கள் விமர் சிப்பார்கள். அதற்கு மக்களுக் காக பெற்றுள்ளேன் என்று அவர் விளக்கம் கூறுவார். கட் சிக்கு கூட தெரியாமல் கட்சி யின் முடிவை மீறியும் இந்தப் பெரும் தொகையை ரணிலுடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுடன் பெற்றுள்ளார் என்றால், அவர் ஓர் உத்தரவாதத்தை வழங்கியி ருப்பார். எதிர்வரும் ஜனாதிப தித் தேர்தலில் நான் நேரடியா கவோ அல்லது மறைமுகமா கவோ. வேலை செய்வேன் என்ற உத்தரவாதத்தை வழங்கி இருப் பதனால் தான் ஜனாதிபதி இவ் வளவு பெரும் தொகையை வழங்கியுள்ளார். ரணில் விக்கிர மசிங்க இவ்வாறான நரித் தந்தி ரம் உடையவர் என்றும் பாரா ளுமன்ற உறுப்பினர்களை எவ் வாறு பாவிக்க முடியும் என்றும் நன்கு அறிந்தவர்- என்றார். (எ)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



அக்கரைப்பற்று, ஓக. 13

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை அல் முனீரா மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு சின்னம் சூட்டும் விழாவும், சான் றிதழ் வழங்கும் நிகழ்வும் பாட சாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ. சீ. நியாஸ் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். சித்தி பாத்திமா, மாணவி களுக்கு சின்னம் சூட்டியதுடன், சான்றிதழும் வழங்கினார். (எ)



## மு. கா. இளைஞர்களுடன் ஹக்கீம் எம். பி. சந்திப்பு

சாய்ந்தமருது, ஓக.13

சிறீ லங்கா முஸ்லிம் காங்கி ரஸ் கட்சியைச் சேர்ந்த இளை ஞர்களுடன் அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான ரவூப் ஹக்கீம் சாய்ந் தமருதில் சந்தித்து கலந்துரை யாடியுள்ளார்.

முன்னாள் கல்முனை மாநகர சபை முதல்வரும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரப் பணிப்பாளருமான சிராஸ் மீரா சாஹிப் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சந் திப்பு நடைபெற்றது.

இதன்போது, விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட் டன. (எ)



## தேசிய மட்டத்துக்கு தெரிவான வீரர்கள் பாராட்டி கௌரவிப்பு

கல்முனை, ஓக. 13

தேசிய மட்டத்துக்குத் தெரி வான கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மெய்வல்லுநர் வீரர்களை மற் றும் பட்மிண்டன் வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசா லையின் அபிவிருத்தி நிறைவேற் றுக் குழு, பழைய மாணவர் சங்கம் மற்றும் கல்முனை சனி மௌண்ட் விளையாட்டுக் கழ கம் ஆகியவற்றினால் ஒழுங்க மைக்கப்பட்டு நடை பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான நிர்வாக குழு வினர், பாடசாலை நிர்வாகத்தி னர், வர்த்தகர்கள், விளையாட் டுக் கழகங்கள், மற்றும் தனி யார் நிறுவனங்கள், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதி பர், ஆசிரியர்கள் இணைந்து மாணவர்களை கௌரவித்தனர்.

# மொட்டு அமைப்பாளர் சஜித்துடன் இணைவு


மட்டு. அமைப்பாளராக நியமனம்

மட்டக்களப்பு, ஓக. 13

சிறீ லங்கா பொதுஜன பெர முனவின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

நீண்டகாலமாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மட் டக்களப்பு மாவட்ட அமைப் பாளராக செயல்பட்டுவந்த ப. சந்திரகுமார் என்பவரே ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள் ளார்.

இந்த நிலையில், எதிர்க்கட் சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள்



சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பத வியை சந்திரகுமாருக்கு வழங்கி யுள்ளார். (எ)

## சம்மாந்துறையில் நகை திருடிய பெண் அம்பாறையில் சிக்கினார்

சம்மாந்துறை, ஓக. 13

சம்மாந்துறை பொலிஸ் பிரி வுக்குட்பட்ட விளினியடி பௌசியா மாவத்தை பிரதேசத் தில் அமைந்துள்ள நகைக்கடை யில் நகை திருடப்பட்டுள்ள தாக நகைக்கடை உரிமையாளர் சம்மாந்துறை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்திருந் தார்.

இது தொடர்பில் விசாரணை களை முன்னெடுத்த சம்மாந் துறை பெருங்குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினர், அம் பாறை பிரதேசத்தில் உள்ள நகைக்கடையில் நகைகளை விற்பனை செய்யும் போது திருடிய நகைகளுடன் பெண் ஒருவரை கைது செய்தனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் சதியால் நான் ஆட்சியை இழந்தேன்

## ஷேக் ஹசீனா குற்றச்சாட்டு

புதுடில்லி, ஒக. 13

**பங்களாதேஷத்துக்கு சொந்தமான செயின்ட் மார்ட்டின் தீவை தங்களிடம் ஒப்படைக்க அமெரிக்கா வலியுறுத்தியது. அதனை மறுத்து நாட்டு நலனுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்தேன். அதனால், அமெரிக்காவின் சதியால் நான் ஆட்சியை இழந்தேன் என்று பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா குற்றஞ்சாட்டியுள்ளார்.**



பங்களாதேஷில் இடஒதுக்கீடு நடைமுறையை எதிர்த்து கடந்த ஜூன், ஜூலையில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டங்கள் கலவரமாக வெடித்ததால் கடந்த 5ஆம் திகதி பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். இந்த நிலையில், இந்திய ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷத்துக்கு சொந்தமான செயின்ட் மார்ட்டின் தீவை தங்களிடம் ஒப்படைக்க அமெரிக்கா வலியுறுத்தியது. அந்தத் தீவை அமெரிக்காவுக்கு வழங்கியிருந்தால், ஆட்சியில் நீடித்திருப்பேன். ஆனால், பங்களாதேஷத்தின் நலனுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்தேன். தற்போது அமெரிக்காவின் சதியால் ஆட்சியை இழந்துள்ளேன்.

நான் பேசியதை திரித்து கூறி மாணவர் போராட்டத்தை சிலர் தூண்டினர். போராட்டங்களில் ஈடுபட்ட மாணவர்கள் பரிதாபமாக உயிரிழப்பதை நான் விரும்பவில்லை. எனவே, மாணவர்களின் நலன் கருதி, பதவியை இராஜினாமா செய்தேன்.

பங்களாதேஷ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள். சமூக விரோதிகளை நம்பி ஏமாறாதீர்கள். அவர்களை எதிர்த்து நில்லுங்கள். அவாமி லீக் கட்சியினர், பொதுமக்கள் தாக்கப்படுவதாக வரும் செய்திகள் கவலையளிக்கின்றன. நாட்டின் விடுதலைக்காக என் தந்தையும் (முஜிபுர் ரகுமான்), குடும்பத்தினரும் இன்னுயிரை தியாகம் செய்தனர். பங்களாதேஷ் மற்றும் நாட்டு மக்களுக்காக தொடர்ந்து பிரார்த்தனை செய்வேன். இறைவன் அருளால் மீண்டும் பங்களாதேஷத்துக்கு திரும்பி வருவேன்- இவ்வாறு ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார். (எ)

# 15 கின்னஸ் சாதனைகள் ஒரே நாளில் முறியடிப்பு

லண்டன், ஒக. 13

லண்டனில் ஒரே நாளில் 15 கின்னஸ் சாதனைகளை அமெரிக்க நபர் ஒருவர் முறியடித்துள்ளார்.

அமெரிக்காவின் இடாஹோ மாகாணத்தை சேர்ந்தவர் டேவிட் ரஷ். இவர் தனது வாழ்நாளில் 250 உலக சாதனைகளுக்கு மேல் முறியடித்துள்ளார். ஒவ்வொரு சாதனையாக முறியடித்த இவர் திடீரென லண்டனில் உள்ள கின்னஸ் உலக சாதனைகளின் தலைமையகத்துக்குச் சென்று, ஒரே நாளில் 15 உலக சாதனைகளை முறியடித்துள்ளார்.

அதாவது முதலில் ஜக்கிலிங் வித்தை எனப்படும் 3 பழங்களை ஒன்றன் பின் ஒன்றாக உயரே தூக்கிபோட்டு ஒரு நிமிடத்துக்குள் அதிக முறை அப்பிள்களை கடித்த சாதனையை டேவிட் ரஷ் முறியடித்து, 198 முறை அப்பிள்களை கடித்து உலக சாதனையை படைத்தார். இவ்வாறு 15 வகைகளில் குறைந்த நிமிடத்தில் கின்னஸ் சாதனையை ஒரே நாளில் இந்த சாதனை மனிதன் முறியடித்து காட்டியுள்ளார். (எ)



# மொசாட் தளங்கள் மீது ஈரான் கடும் தாக்குதல்

தெஹ்ரான்,ஒக. 13

இஸ்ரேலுக்கு வெளியே அமைந்துள்ள மொசாட் அமைப்பின் தளங்கள் மீது தாக்குதல் நடத்த ஈரான் ஜனாதிபதி பெஷ்கியன் உத்தரவிட்டுள்ளார்.

ஈரானின் புதிய ஜனாதிபதியாக மசூத் பெஷ்கியன் அண்மையில் பதவியேற்று கொண்டார். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த ஹமாஸ் அமைப்பின் தலைவரான இஸ்மாயில் ஹனியே தெஹ்ரானில் வைத்து கொல்லப்பட்டார்.

இது ஈரானின் இறையாண்மை மீறிய செயல் என அந்த நாடு கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில், ஈரானின் இஸ்லாமிய புரட்சி படையினர், டெல் அவிவ் நகரம் மற்றும் இஸ்ரேலின் பெரிய நகரங்கள் மீது நேரடியான மற்றும் கடுமையான ஏவுகணை தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை, இஸ்ரேலுக்கு வெளியே அமைந்துள்ள மொசாட் அமைப்பின் தளங்கள் மீது தாக்குதல் நடத்தும்படி ஈரான் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அதிலும், அஜர்பைஜான் குடியரசு மற்றும் ஈராக்கில் குர்திஸ்தான் உள்ளிட்ட அண்டை பகுதிகளை இலக்காக கொண்டு தாக்குதல் நடத்தக் கூறியுள்ளார்.

இதனால், இஸ்ரேலுடனான முழு அளவிலான போருக்கான ஆபத்து குறையும் என்று அவர் நம்புகிறார். இஸ்ரேல் மீது நடத்தப்படும் எந்தவொரு நேரடித் தாக்குதலும், ஈரானுக்கு எதிரான கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என அவர் அஞ்சுகிறார் என அவருடைய நெருங்கிய உதவியாளர், தி டெலிகிராப் செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார். (எ)

# ஜோர்தான் உங்கள் போர்த்தளம் அல்ல

## அமெரிக்காவிடம் கூறிய அரசர்



அமான், ஒக. 13

ஜோர்தான் நாடு உங்கள் போருக்கான தளம் அல்ல என்று அமெரிக்காவிடம் தெளிவுபடுத்தியுள்ளார் அந்த நாட்டின் அரசர் அப்துல்லா.

ஜோர்தான் மக்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எதனையும் எங்கள் நாடு சகித்துக் கொள்ளாது என்றும் அரசர் அப்துல்லா கூறியுள்ளார்.

ஜோர்தான் நாட்டுக்கு அமெரிக்காவை சேர்ந்த பாராளுமன்ற பணியாளர் குழுவினர் வருகை தந்துள்ளனர். அவர்களை அந்த நாட்டின் அரசர் அப்துல்லா வரவேற்றார். இதன்பின்னர், இரு நாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்துவது மற்றும் மண்டல வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஆலோசனை கூட்டம் நடந்தது.

இதன்போது, எங்கள் நாடு எந்தவொரு நாடும் போர் செய்வதற்கான தளம் அல்ல எனத் தெளிவுபடுத்தினார் அரசர்.

இதேவேளை, காஸாவில் தொடரும் போரானது, அந்த பகுதியின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என எச்சரித்த அவர், உடனடியாக நிரந்தர போர் நிறுத்த ஒப்பந்த முடிவை ஏற்படுத்தி, போரை நிறுத்த சர்வதேச முயற்சிகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (எ)

# ஷேக் ஹசீனாவுக்கு எதிராக தடைகள் விதிக்க வேண்டும்

## அமெரிக்க காங்கிரஸ்

வாஷிங்டன்,ஒக. 13

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் அந்த நாட்டு அதிகாரிகளுக்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதிக்க வேண்டும் என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனநாயக வழியில் போராடிய மாணவர்களுக்கு எதிராக ஈவிரக்கமற்ற முறையில் ஒடுக்குமுறை பிரயோகிக்கப்பட்டது. எனவே, முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா உட்பட பங்களாதேஷ் தலைவர்களை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த வேண்டும்.

ஹசீனாவின் அரசியில் உள்துறை அமைச்சராக இருந்த அசாதுஸமான் கான் ஹமால், அவாமி லீக் கட்சியின் பொதுச்செயலாளர் ஒபைதுல் குவாடர் ஆகியோர் மீது இவ்வாறு தடைகளை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர், திறைசேரி செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தடைகளை விதிக்க வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஷேக் ஹசீனாவின் அரசாங்கம் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக அளவுக்கதிகமான படைபலத்தை பயன்படுத்தியது என மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டியுள்ளன.

இதேவேளை முகமட் யூனுஸ் இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக பதவியேற்றுள்ளதை அமெரிக்கா வரவேற்றுள்ளது. (எ)

# 200 ரோஹிங்யா அகதிகள் ட்ரோன் தாக்குதலில் பலி!

நைபிடா,ஒக. 13

200 இற்கும் மேற்பட்ட ரோஹிஞ்யா அகதிகள் ட்ரோன் தாக்குதலில் பலியாகினர்.

மியன்மாரில் இருந்து ரோஹிஞ்யா முஸ்லிம்கள் அகதிகளாக பங்களாதேஷ் நாட்டுக்கு தப்பிச் செல்கின்றனர். 2017ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 7 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக தப்பிச் சென்றுள்ளனர். இந்த நிலையில், எல்லை பகுதியில் தப்பிச் செல்ல முயன்ற அகதிகளில் பலர் ட்ரோன் (ஆளில்லா விமானம்) தாக்குதலில் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல் பற்றிய அதிர்ச்சி காணொலிகள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன. அதில், அகதிகளின் உடைமைகள் தரையில் பரவிக் கிடக்கின்றன. அதன் அருகே அவர்களின் உடல்கள் குவியலாக கிடக்கின்றன.

மியன்மாரில் இருந்து முஸ்லிம் சிறுபான்மையினரான ரோஹிஞ்யாக்கள் படகுகளில் தப்பிச் சென்றபோது, நப் ஆற்றில் படகுகள் கவிழ்ந்தும் பலர் உயிரிழந்தனர்.

# 74 சதவீதம் பாக். மக்கள் வாழ வழியின்றி தவிப்பு

கராச்சி, ஒக. 13

பாகிஸ்தானில் 74 சதவீதத்தினர் வாழ்க்கைச் செலவுக்கு வழியின்றி தவித்து வருகின்றனர் என்று ஆய்வில் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் நாட்டில் மக்கள் தொகை சுமார் 24 கோடியாக உள்ளது. அவர்களில் பலர் செலவுக்கு வழியின்றி தவித்து வரும் சூழல் காணப்படுகிறது. இதுபற்றி வெளியான ஆய்வு அறிக்கை ஒன்றில், 56 சதவீத மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு செலவிட்ட பின்னர் சேமிப்பதற்கு முடியாத சூழலில் உள்ளனர்.

வாழ்க்கைச் செலவுக்கு வழியின்றி தவித்து வரும் மக்கள் தொகை கடந்த ஆண்டு மே மாதத்தில் 60 சதவீதம் என்ற அளவில் இருந்தது. இது நடப்பாண்டில் 74 சதவீதம் என அதிகரித்துள்ளது. இதில் 40 சதவீதத்தினர் கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

10 சதவீதத்தினர், வருவாயை ஈடு கட்டும் வகையில் பகுதி நேர வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டியில் இருந்து ரணில் விலகிக்கொள்ள வேண்டும்!

## ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ

கொழும்பு, ஓக. 13

**ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவது சட்ட விரோதமாகும். அது தொடர்பில் ஜனாதிபதி வெட்கப்பட வேண்டும். சரியாக இருந்தால் அவர் ஜனாதிபதி போட்டியில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும் என தேசிய ஜனநாயக முன்னணி ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**



தேசிய ஜனநாயக முன்னணி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு வேட்பாளரின் பெயரை வாக்குச்சீட்டில் உள்வாங்க 25மில்லியன் ரூபா செலவாகிறது. இதுவரை 27வேட்பாளர்கள் இருக்கின்றனர். அப்படியானால் எந்தளவு தொகை செலவாகிறது என்பதை தெரிந்து கொள்ளலாம். மக்களின் பணமே இதனால் விரயமாகிறது.

அதேநேரம் ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவரும் வேட்பாளராக போட்டியிடுகிறார். ஜனாதிபதியின் ஆலோசர் ஒருவர் வேட்பாளராக வருவதாக இருந்தால் அது ஜனாதிபதியை ஊக்குவிப்பதற்கே போட்டியிடுகிறார் என்பது எவருக்கும் புரிந்துகொள்ளலாம். இந்த செயல் சட்டவிரோதமானதாகும். இது தொடர்பில் ஜனாதிபதி வெட்கப்பட வேண்டும். ஜனாதிபதி இந்தளவு கீழ் மட்டத்துக்கு செல்வதாக இருந்தால் அவர் போட்டியில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

இதேவேளை, நானே சுதந்திர கட்சியின் உத்தியோகபூர்வமான தலைவர். சுதந்திர கட்சி சார்ப்பாகவே நான் போட்டியிடுகிறேன். இடைக்கால தடை உத்தரவு இருப்பதால் அதனை பயன்படுத்துவதில்லை.

கூட்டணி அமைத்து போட்டியிடும்போது கட்சியை யாரும் ஊக்குவிப்பதில்லை. போட்டியிடும் கட்சியையும் சின்னத்தையுமே ஊக்குவிக்கின்றனர். சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ அனைவரும் அவ்வாறே செயல்பட்டனர். கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் என்னுடனே இருக்கின்றனர்.

சுதந்திர கட்சியின் தலைமைத்துவத்துக்கு நான் பலாத்காரமாக வரவில்லை. இரண்டு முறை கட்சியின் நிறைவேற்றுக் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டேன். தலைமைப் பதவிக்கு நிமல் சிறிபால டி சில்வா, தயாசிறி யாரும் போட்டியிடவில்லை. கட்சியின் நிறைவேற்று சபையின் 240பேரில் 220பேர் என்னுடன் இருக்கிறார்கள்-என்றார்.

(அ)

# மீண்டும் தோட்ட மக்களை ஏமாற்ற ஜனாதிபதி ரணில் பொய் வாக்குறுதி

கொழும்பு, ஓக. 13

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பேன். நான் தான் தற்போது தொழில் அமைச்சர் என்று கூறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அந்த மக்களை ஏமாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றஞ்சாட்டினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நடந்த ஊடகச் சந்திப்பிலேயே இவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

வி. எவ். எஸ். வீசா கொடுக்கல் - வாங்கல் மோசடியை அமைச்சர் டிரான் அலஸ் மூடி மறைக்க முயற்சிக்கிறார்.

செப்ரெம்பர் 21ஆம் திகதி சஜித் பிரேமதாஸவின் வெற்றியை தொடர்ந்து, முதலில் நாம் இந்த வி. எவ். எஸ். வீசா கொடுக்கல் - வாங்கல் மோசடி குறித்தே விசாரணை நடத்துவோம்.

ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, அநுரகுமார என சகலரினதும் ஒரே இலக்கு சஜித் பிரேமதாஸவே. சஜித் பிரேமதாஸவை தோற்கடிக்க வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாகும். இதன் ஒரு பகுதியாகவே ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்பந்தம் ஒன்றின் பிரகாரம் சரத் பொன்சேகாவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார்-என்றார்.

(எ)

# கார் சின்னத்தில் விஜயதாஸ

கொழும்பு, ஓக. 13

தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ கார் சின்னத்தில் போட்டியிடுகிறார்.

அத்துருகிரியவிலுள்ள ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கை அலுவலகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் சின்னம் அறிவிக்கப்பட்டது.

இதன்போது, சுதந்திரக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தரப்பினர் எவரும் கலந்து கொள்ளாத நிலையில் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதிலிருந்து விலகியுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவளிப்போர் தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளதாகவும் விஜயதாஸ தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

சுதந்திரக் கட்சியின் பெயரைப் பயன்படுத்தி விபசார குழுவொன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குகின்றனர்.

அவர்கள் அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவி வகித்து வருகின்றனர். நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாக கூறுகிறார்.

கட்சியையும் அழித்து 40 வருடங்களாக நாட்டை அழித்த தலைவரால் எவ்வாறு சாத்தியமாகும்? ஏமாறும் அளவுக்கு மக்கள் மனநோயாளிகள் அல்லர்-என்றார்.

(அ)

# ஜனாதிபதி தேர்தலில் ரொஷான் ரணசிங்க!

கொழும்பு, ஓக. 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா அறக்கட்டளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை அறிவித்தார்.

2020 ஆம் ஆண்டில் பொது ஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி, அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவானார்.



நாமல் ராஜபக்ஷ தற்போது பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார்.

இந்நிலையில் கட்சியிலிருந்து வேறு யாராவது போட்டியிட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

(அ)



# ஜனாதிபதி தேர்தலுக்கு பணம் வழங்கத் தயார்

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தலுக்காக ஒதுக்கிய பணத்தை வழங்கத் தயார் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

எட்டியந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

(எ)

# வேவல்தெனிய விபத்தில் மூவர் பலி!

கொழும்பு, ஓக. 13

கொழும்பு-கண்டி நெடுஞ்சாலையின் வெவெல்தெனிய பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக தங்கோவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் கெலிஓயா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

நிட்டபுவவிலிருந்து கண்டி நோக்கி பயணித்த ஓட்டோ ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சாரதியின் தூக்கக் கலக்கத்திலோ அல்லது வீதி மிகவும் தெளிவாக இருக்கும்போது கவனக்குறைவாக செயற்பட்டதாலோ இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# 2 அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ள தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, ஓக. 13

அங்கீகரிக்கப்பட்ட 2 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கட்சிகளின் செயலாளர் பதவிகளில் நிலவும் பிரச்னைகள் குறித்து கலந்துரையாடவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எக்சத் லங்கா மகா சபா கட்சி மற்றும் லங்கா மக்கள் கட்சி ஆகிய 2 கட்சிகளின் பிரதிநிதிகளையே அழைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, அங்கீகரிக்கப்பட்ட 6 அரசியல் கட்சிகளின் செயலாளர் பதவிகளில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக தேசிய தேர்தல் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

சிறிலங்கா முற்போக்கு முன்னணி, ஈழவர் ஜனநாயக முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உள்ளிட்ட 06 கட்சிகளின் செயலாளர் பதவிகளில் சிக்கல்கள் காணப்படுவதாக ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# நடன ஆசிரியையின் மாற்றியமைத்த படத்தை பதிவேற்றம் செய்த இரண்டு மாணவர்கள் கைது

கொழும்பு, ஓக. 13

ஆசிரியை ஒருவரின் புகைப் படத்தை கணினி மூலம் மாற்றம் செய்து இணையத்தில் வெளியிட்டதாக சந்தேகிக்கப்படும் இரு மாணவர்களை மாத்தளை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

மாத்தளை பிரதான பாடசாலையொன்றில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவரின் புகைப்படத்தை கணினி மூலம் ஆபாசமாக மாற்றம் செய்து இணையத்தில் பதிவேற்றம் செய்ததாக அதே பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் இரு மாணவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை நகரிலுள்ள பிரதான கலவன் பாடசாலை ஒன்றில் பத்தாம் தரத்தில் கல்வி கற்கும் அந்த மாணவர்கள் மாத்தளை ஹூலங்கமுவ மற்றும் வாரியபொல பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொல்கொல்ல மகாவலி கல்வி பீடத்தைச் சேர்ந்த குறித்த ஆசிரியை, ஒரு வருட பயிற்சிக்காக மாத்தளை கல்லூரி ஒன்றில் நடன ஆசிரியையாக பணி புரிந்துள்ளார்.

தனது புகைப்படத்தில் முகத்தை கணினி மூலம் வெட்டியெடுத்து நிர்வாணப் புகைப்படம் ஒன்றுடன் இணைத்து முகநூலில் வெளியிடப்பட்டுள்ளதாக குறித்த ஆசிரியை மாத்தளை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவ் இரு மாணவர்களையும் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து காவலில் வைக்கப்பட்ட இரு மாணவர்களும் மாத்தளை சிறுவர் நன்னடத்தை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, நன்னடத்தை அறிக்கைகளுடன் மாத்தளை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரூ.100கோடி...

ரம்புக்வெல, சிரேஷ்ட அதிகாரி சுஜீவ ரத்நாயக்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள் ளனர்.

2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 23 ஆம் திகதி வெளிநாடுகளில் நடைபெற விருந்த மாநாடுகளில் பங்கேற்பதற்காக டுபாய் செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்ததாக குறித்த மனுவின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது, வெளிநாடு செல்வதற் காக இராஜதந்திர கடவுச்சீட்டை வழங் கியதாகவும் அங்குள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் அதை சரி பார்த்து அது செயலற்ற கடவுச்சீட்டு என அறிவித்ததாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர், குற்றப் புலனாய்வு திணைக் கள அதிகாரிகளால் எவ்வித நியாயமான காரணமும் இன்றி கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற் படுத்தப்பட்ட பின்னர் பிணையில் தான் விடுவிக்கப்பட்டார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் தனது நற்பெயருக்கு களங்கம் விளைவித்ததாகவும் குறிப்பிட் டுள்ளார். இதன்படி, நியாயமான விசாரணை நடத்தாமல், தீங்கிழைக்கும் வகையில் கைது செய்து, வழக்குப்பதிவு செய்ததன் மூலம் தனது நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கத்துக்காக பிரதிவாதி களிடமிருந்து 100 கோடி ரூபாய் நட்ட ஈடு கோரி பாராளுமன்ற உறுப்பினர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். (ஐ)

## நீதி...

போட்டியிடுவதற்காக கடந்த ஜூலை 29ஆம் திகதி பதவியைத் துறந்தார். இதைத் தொடர்ந்து, அவரின் அமைச்சு களை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவே கவனித்து வந்தார்.

இந்த நிலையில், நீதி அமைச்சரா கவும் அலி சப்ரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று பதவியேற்றார்.

வெளிவிவகார அமைச்சராகவும் பதவி வகித்து வரும் அலி சப்ரி கோட் டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு பதவிகளை வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய...

இதன்போதே மேற்கண்டவாறு ஜனா திபதி ரணில் தெரிவித்திருந்தார்.

மேலும் இந்த சந்திப்பில்,

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பை தடுப்பது, தமிழ் இளைஞர் கள், யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்து தல், இந்திய மீனவர்களின் அத்துமீற லால் எமது மீனவர்கள்படுகின்ற துன் பம், உட்பட பல விடயங்கள் தீர்க்கப் பட வேண்டுமென தமிழ்க் கட்சிகள் முன்வைத்தன.

இவற்றுக்கான தீர்வை நிச்சயம் தான் வழங்குவேன் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார். அத்துடன், அபிவிருத்தித் திட்டங்க ளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குவது தொடர்பிலும் பேசப்பட்டதாகத் தெரிய வந்தது.

இந்த சந்திப்பில், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி., புளொட் தலைவர் த. சித்தார்த்தன் எம். பி., கோ. கருணாகரம் எம். பி., ஜன நாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், ரெலோ பேச்சாளர் கு. சுரேந் திரன், ஜனநாயக போராளிகள் கட்சி பேச்சாளர் க. துளசி ஆகியோரும் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## புளொட்...

அழைப்புகள் விடுக்கப்பட்டிருந்தன. இந்த சந்திப்பில் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிவில் அமைப்புகள் பங்கேற்க மறுத்து விட்டன. வேலைப் பளு காரணமாகவே இந்த சந்திப்பில் அவை பங்கேற்கவில்லை என்று தெரி விக்கப்பட்டது.

எனினும், இந்த சந்திப்பில் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளான ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சிகள் சந்திக்கவுள்ளன. இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவரின் பணிமனை யில் இந்த சந்திப்பு நடைபெறும் என்று தெரிய வருகின்றது.

இந்தக் கட்சிகள், நேற்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசியிருந்தன என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

## நாகபட்டினம்...

துறைமுகத்துக்கு வந்து திரும்பியிருந்தது.

முன்னதாக, நாகபட்டினம் - காங் கேசன்துறை கப்பல் சேவையை கடந்த ஆண்டு ஒக்ரோபர் 14ஆம் திகதி இந்திய பிரதமர் நரேந்திர மோடி மெய் நிகர் வழியே தொடக்கி வைத்தார். வட கிழக்கு பருவ மழை மற்றும் புயல் என்ப வற்றை காரணம் காட்டி ஓரிரு சேவை களுடனேயே இந்தக் கப்பல் சேவை நிறுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## சகமாணவர்...

- தனமன்வில பிரதேசத்தில் இடம்பெற் றுள்ளது. இது தொடர்பில், 17 மாண வர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பாதிக்கப்பட்ட மாணவியை சக மாணவன் காதலித்து வந்துள்ளார். காதலன் என்று கூறப்படும் மாணவன் அந்த மாணவியை தனது வீட்டுக்கு அழைத்துள்ளார். அவரை நம்பி சென்ற மாணவிக்கு மதுவை கட்டாயப்படுத்தி பருக்கியுள்ளார் மாணவன். இதன் பின்னர், அவரும் அவருடைய நண்பர்க ளும் கூட்டாக வன்புணர்ந்துள்ளனர். மாணவர்கள் இணைந்து இந்தச் செய லைச் செய்ததுடன், அதனை காணொ லியாகவும் பதிவு செய்திருந்தனர்.

நடந்த சம்பவத்தை எவரிடமாவது கூறினால் காணொலியை வெளியிடு வோம் என்றுகூறி மிரட்டியுள்ளனர். இதைத் தொடர்ந்து அந்தக் காணொ லியை காண்பித்து பல்வேறு சந்தர்ப் பங்களில் வேறு மாணவர்களும் வன்பு ணர்வுக்கு உட்படுத்தினர் என்றும் மாணவி பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மாணவியின் காதலன் என்று கூறப் படும் மாணவனின் தாயார் ஓர் ஆசிரி யையாவார். தந்தை தனமன்வில கல்வி வலயத்தில் கற்பித்தல் பயிற்றுவிப்பா ளராவார். மாணவிக்கு நேர்ந்த சம்ப வத்தை அறிந்திருந்தபோதும் அதனை, பாடசாலை நிர்வாகம் மறைத்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. தமது பாடசாலையின் நற்பெயருக்கு களங்கம் வந்து விடக் கூடாது என பாடசாலை அதிபர் மற்றும் ஒழுக்காற்று குழுவினர் இதை விசா ரணை செய்ய வில்லை என்றும் பொலிஸ் விசார ணையில் தெரிய வந்துள்ளது.

மேலும் சட்ட நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக கல்லூரியின் அதிபர் மாணவர்களின் பெற்றோர்களிடம் கடி தங்களை பெற்றிருந்தார் என்றும் தனம ன்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும், தற்போது பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக் கப் பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த கொடூரமான சம்பவம் குறித்து தன மன்வில பிரதேச மக்கள் அதிர்ச்சிய டைந்துள்ளனர். அத்துடன், பாதிக்கப் பட்ட மாணவிக்கு நீதி கிடைக்கவும் வலியுறுத்தி வருகின்றனர். (ஐ)

# வேட்பு மனுவில் அநுர ஒப்பம்!

கொழும்பு, ஓக. 13

ஜனாதிபதி தேர்தல் வேட்பு மனுவில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நேற்று கையொப்பமிட்டார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனுவில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரான அநுரகுமார திஸநாயக்க நேற்று திங்கட்கிழமை கையொப்பமிட்டார்.

ஜே. வி. பியின் தலைமை பணிமனை யில் நடந்த இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியினர் பலர் பங்கேற்றனர். (ஐ)

# எமக்கு நாமல் சவால் அல்லர்!

பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஓக. 13

ஜனாதிபதித் தேர்தலில் எமக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் தான் போட்டி நிலவும். ஜனாதிபதி வேட் பாளர் நாமல் ராஜபக்ஷ எமக்கு சவால் அல்ல. மகிந்த ராஜபக்ஷமீது நாட்டு மக்கள் மரியாதை வைத்துள்ளனரே தவிர, ராஜபக்ஷ குடும்பத்தின்மீது மரி யாதை வைக்கவில்லை என்று வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷமீது நாங்கள் இன்றும் மரியாதை வைத்துள்ளோம். அதேபோல் நாட்டு மக்களும் மரியாதை வைத்துள்ளார்கள். ஆனால், ராஜபக்ஷ குடும்பத்தின் மீது நாட்டு மக்கள் மரியாதை வைத்திருக்க வில்லை என்பதை குறிப்பிட்டுக் கொள்ளவேண்டும்.

முதலாவதும் நாடு - இரண்டாவதும் நாடு - மூன்றாவதும் நாடு என்று முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிடுவார். தற்போதைய நிலையில் நாட்டை பற்றி மாத்திரமே சிந்திக்க வேண்டும் என்பதால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம். ஆகவே, எமது தீர்மா னத்துக்கு அவர் முழுமையான ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறோம்.

ஜனாதிபதித் தேர்தலில் எமக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் தான் போட்டி. ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ எமக்கு ஒரு சவால் அல்ல. ஜனாதிபதி வேட்பாளர் பத்தர முல்லை சீலரத்ன தேரருக்கும் நாமல் ராஜ பக்ஷவுக்கும் இடையில்தான் போட்டி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் தோற்றுவிப்போம். எமது தேர்தல் பிர சாரங்களை இந்த வாரம் முதல் ஆரம் பிப்போம். ஜனாதிபதியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் - என்றார். (ஐ)

# கிராம உத்தியோகத்தர்களின் எதிர்ப்பு வாரம் நேற்று முதல்!

கொழும்பு, ஓக. 13

நேற்று முதல் வரும் 19 ஆம் திகதி வரை எதிர்ப்பு வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக கிராம உத்தியோ கத்தர்கள் தொழிற்சங்க கூட்டணி அறிவித்துள்ளது.

சுயாதீனமான கிராம உத்தியோகத்தர் சேவை யாப்பு வர்த்தமானிக்கு எதிர்ப்பு தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கை யில் ஈடுபடவுள்ளதாக கிராம உத்தியோ கத்தர்கள் தொழிற்சங்க கூட்டணி தெரிவித்துள்ளது.

இந்த எதிர்ப்பு வாரத்திற்குள் குறித்த வர்த்தமானியை இரத்து செய்ய வேண் டும் எனவும் அல்லது கிராம உத்தி யோகத்தர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை கேட்டறிந்து அவற்றை உள்ளடக்கிய திருத்தப்பட்ட வர்த்த மானியை வெளியிடுமாறும் கூட்ட ணியின் இணைத்தலைவர் நந்தன ரண சிங்க தெரிவித்துள்ளார். (அ)

# சிறுபோகத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடன் நட்டஈடு

## அமைச்சர் பணிப்புரை



கொழும்பு, ஓக. 13

சிறுபோகத்தில் ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதங்களுக்கு உடனடியாக நட்ட ஈட்டை வழங்குவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

இம்மாதம் பயிர்ச் சேதங்கள் பதிவாகி யுள்ள பகுதிகளுக்கு இந்த இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு விவசாயத் திணைக்களத்துக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போது பல பகுதிகளிலும் சிறுபோக அறுவடை நடைபெற்றுவரும் நிலை யில், அறுவடை நிறைவடைந்ததன் பின் னர் பயிர்ச் சேதத்திற்கான தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட் டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டார். (அ)

## த.தே.பொ....

இந்த சந்திப்பில் பங்குகொள்வ தில்லை என்று தமிழ்த் தேசியப் பொதுக் கட்ட மைப்பு தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

முன்னதாக, ஜனாதிபதியும் பிரதான வேட்பாளர்களில் ஒருவருமான ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களை சந்திப் புக்கு அழைத்திருந்தார். இந்த சந்திப் பிலும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்ட மைப்பினர் பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 32பேர்...

நிறைவு பெறும். அத்துடன், நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரையான காலப் பகுதியில் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# யாழ்.ரயிலில் தொடர்ச்சியாக டீசல் திருடும் மர்ம கும்பல்!

## விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 13

**யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையில் ரயிலில் தொடர்ச்சியாக டீசல் திருடிய கும்பல் தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.**

கடந்த 9ஆம் திகதி காங்கேசன்துறை ரயில் நிலையத்தில், இரவு வேளையில் ரயில் தரித்து நின்ற போது இனந்தெரியாத குழுவொன்று திருட்டில் ஈடுபட்ட சமயம், ரயில் நிலையத்தில் கண்காணிப்பில் ஈடுபட்ட அதிகாரிகளால் குறித்த சம்பவம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

இதன்போது திருட்டில் ஈடுபட்ட கும்பல் தப்பிச்சென்றதை அடுத்து நான்கு 20 லீற்றர் கொள்கலன்களில் டீசல் நிரப்பப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

ரயில் எரிபொருள் தாங்கியின் திறப்புக்கள் அனுராதபுரத்திலேயே இருப்பதாகக் கூறப்படும் நிலையில், குறித்த திருட்டுக்கு ரயில் நிலைய ஊழியர்களும் உடந்தையாக செயற்பட்டார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தொடர்ச்சியாக எரிபொருள் தாங்கியில் இருந்து எரிபொருள் திருடப்பட்டு வந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸார், ரயில் திணைக்களத்தினர் தனித்தனியே விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பெருந்தோட்ட தொழிலாளருக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபா!

## வழங்குவதற்கு நேற்று மீண்டும் தீர்மானம்

கொழும்பு, ஓக் .13

பெருந்தொட்ட தொழிலாளர்களுக்கான நாளாந்த கொடுப்பனவு 1700 ரூபாவான வழங்கப்பட வேண்டும் என கோரியிருந்த நிலையில், சம்பள நிர்ணய சபையில் அது தொடர்பில் நேற்று இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இதனடிப்படையில், சம்பள நிர்ணயச் சபையில் இது தொடர்பான இறுதித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்காக சம்பள நிர்ணய சபையில் வாக்கெடுப்பொன்றும் நடத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாவும், உற்பத்தி ஊக்குவிப்பு விசேட கொடுப்பனவாக 350 ரூபாவும் வழங்க இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறினார்.

மேலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் சம்பளத்தை



முன்மொழிந்தது போல் அதனை மக்கள் கைக்கு பெற்றுக்கொடுக்கும் முழுப்பொறுப்பும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸூக்கு உள்ளது எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். (அ)

# துணிவிருந்தால் பாகிஸ்தான் கடலில் இந்தியா மீன் பிடித்துப் பார்க்கட்டும்!

## சவால் விடுகிறார் சுப்பிரமணியம்

கொழும்பு, ஓக. 13

இலங்கை சிறிய நாடு என்ற வகையில் வாய்க்கு வந்தது போல் சில குற்றச்சாட்டுகளை நீங்கள் முன்வைக்கின்றீர்கள். உங்களுக்குத் துணிவிருந்தால் பாகிஸ்தானுக்கு அண்டிய பகுதியில் அல்லது அந்த நாட்டு எல்லைக்குள் சென்று மீன் பிடித்து பாருங்கள் என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.வி சுப்பிரமணியம் சவால் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது கடல் எல்லைக்குள் வரும் இந்திய மீனவர்களைத் தான் எமது கடற்படை கைது செய்கின்றது. நல்ல எண்ணத்துடன் இருக்கின்ற சில கடற்கரையினர் அவர்களை கைது செய்யக்கூடாது என்ற எண்ணத்தோடு விரட்டியடிக்கின்றார்கள். இல்லாவிட்டால் அனைவரையும் கைது செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

குறிப்பாக ஒரு நாளைக்கு இரண்டு படகுகளை கைது செய்தால் ஒரு மாதத்தில் 20 அல்லது 24 படகுகள் கைது செய்ய வேண்டி ஏற்படும். 2016 இல் இருந்து 2024 வரையான 8 வருடங்களுக்குள் அண்ணளவாக 2500 படகுகளை அவர்கள் கைது செய்திருக்க முடியும். பெரும்பாலும் ஒன்று இரண்டு படகுகளை கைது செய்து விட்டு மிகுதி படகுகளை விரட்டித்தான் விடுகின்றார்கள். இது இவ்வாறு இருக்கையில் இந்தியாவிலிருந்து ஒரு அப்பட்டமான பொய்யை பரப்புகின்றார்கள்.

எங்கள் நாட்டுக்குள்ளே வந்து எங்கள் வளங்களையும், வாழ்வாதாரத்தையும் கொள்ளை அடித்துச் செல்கின்றன இந்திய இழுவைப் படகுகள். கொள்ளையடித்துச் சென்றுவிட்டு, கடற்படை உங்களை விரட்டியடிக்கும் பொழுது எங்கள் கடற்படை கொள்ளை அடிப்பதாக பொய்யான தகவல்களை சொல்கின்றவர்கள். எமது வளங்களைக் கொள்ளையடிக்கின்ற நீங்கள் கொள்ளையர்களா? அல்லது விரட்டியடிக்கின்ற நாங்கள் கொள்ளையர்களா? என்பதை நினைத்து பார்க்கவேண்டும்.

வரலாற்றில் இதுவரைக்கும் எமது மீனவர்கள் எல்லையை தாண்டி போய் எந்த ஒரு கெடுதலான செயல்களையும் செய்யவில்லை. சிறிய நாடு இலங்கை என்ற வகையில் வாய்க்கு வந்தது போல் சில குற்றச்சாட்டுகளை நீங்கள் முன்வைக்கின்றீர்கள்.

உங்களுக்குத் துணிவிருந்தால் உங்களுக்கு அயலில் உள்ள சிறிய நாடான பாகிஸ்தானுக்கு அண்டிய பகுதியில் அல்லது அந்த நாட்டு எல்லைக்குள் சென்று மீன்பிடித்து பாருங்கள். அங்கே சவால் விட முடியாமல், சீனாவுடன் சவால் விட முடியாமல், பல வருடங்கள் போரினாலும், பொருளாதாரத்தாலும் பாதிக்கப்பட்ட கீழ் நிலையில் இருக்கின்ற எமது இலங்கையை நீங்கள் பரிகாசம் செய்கின்றது போல சில விடயங்களை பேசிக் கொண்டிருக்கின்றீர்கள்.

சமீபத்தில் ஜெய்சங்கர் இலங்கை - இந்திய மீனவர்களிடத்தில் ஒரு பேச்சுவார்த்தையை நடத்தி நிரந்தர தீர்வு ஒன்றினை எட்ட வேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கின்றார். அதற்கு அமைவாக அண்ணாமலையும் அவருடன் இணைந்து செயல்படுகின்றமையை எண்ணி சந்தோசப்பணுவதுடன் அதனை வரவேற்கத்தக்க விடயமாகவும் கருதுகின்றோம் - என்றார். (அ)

# தமிழ் முற்போக்குக் கூட்டணி - சஜித் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து!

கொழும்பு, ஓக. 13

தமிழ் முற்போக்கு கூட்டணியினருக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

பெருந்தோட்ட மக்களை வலுவூட்டுவதற்குரிய திட்டங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம் எம். உதயகுமார் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

மலையக மக்கள் முன்னணியின் சார்பில் பங்கேற்றிருந்த விஷ்வா புஷ்பாவும் கையொப்பமிட்டார். (அ)

# ராஜிதவின் ஆதரவும் ரணிலுக்கு!

கொழும்பு, ஓக. 13

ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக களமிறங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு இன்று வெளியாகவுள்ளது.

ராஜித சேனாரத்ன களுத்துறை மாவட்டத்தில் தனது ஆதரவாளர்களை அழைத்து ஆலோசனை நடத்தினார். இதனையடுத்தே ஜனாதிபதியை ஆதரிக்கும் முடிவை எடுத்துள்ளார். (அ)

# சுமந்திரன், சாணக்கியன் சீன தூதுவருடன் சந்திப்பு



கொழும்பு, ஓக. 13

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரனும், இரா.சாணக்கியனும் இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்கொங்கை சந்தித்து கலந்துரையாடினர்.

சீனத் தூதுவரின் அழைப்பின் பேரில் கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் நேற்று திங்கட்கிழமை இந்த சந்திப்பு நடைபெற்றது.

தற்போதைய முக்கிய நிகழ்வுகள் சம்பந்தமாகவும் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் சம்பந்தமாகவும் சினேகபூர்வமாக கலந்துரையாடினோம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (அ)

# இலங்கையின் அடுத்த பிரதமர் ஊவா மாகாணத்தை சேர்ந்தவர்?

கொழும்பு, ஓக. 13

இலங்கையின் அடுத்த பிரதமர் ஊவா மாகாணத்தைச் சேர்ந்தவராக இருக்கக்கூடும் என முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஊவா மாகாணத்தில் இருந்து ஒரு பிரதமரை நியமிக்க வேண்டும் என்றால், பதுளை மாவட்டத்தில் உள்ள 9 ஆசனங்களிலும் வெற்றி பெற்றால், அவரைப் பிரதமராக்கும் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்வேன் எனக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை நோக்கி ஹரின் தெரிவித்தார்.

2020 பாராளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்ட விருப்பு வாக்கு பட்டியலில் நிமல் சிறிபால டி சில்வா 141, 901 வாக்குகளைப் பெற்று முதலிடம் பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org